லங்கா பொஸ்பேற் லிமிட்டட்

வருடாந்த அறிக்கை 2021/22



விவசாய அமைச்சு

நோக்கு

“எப்பாவெல பொஸ்பேற் படுகையின் உச்சபட்ச பயன்பாட்டுடன் பொஸ்பேற் சார்ந்த போசாக்கினை வழங்குவதன் மூலம் எமது தாய் நாட்டின் மண் வளத்தினை மேம்படுத்துதல்.”



செயற்பணி

“நட்புறவுச் சூழல் மற்றும் நவீன செயல்முறையினூடாக பொசுப்பெரஸ் சார்ந்த தன்னிறைவின் மூலம் பொஸ்பேற் வளமாக்கியின் தேசிய தேவைப்பாட்டினை நிறைவு செய்தல்”

பொருளடக்கம்

- அறிமுகம் 01
- பணிப்பாளர் சபை 02
- முகாமைத்துவ குழு 03-04
- தலைவரின் கூற்று 05-06
- பணிப்பாளர்களின் அறிக்கை 07-09
- தொழிற்பாடுகளின் மீளாய்வு 2021/22 10-13
- நிதிசார் முக்கிய விடயங்கள் 14
- நிருவாக கட்டமைப்பு 15
- அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 16
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை 17
- கணக்காய்வாளர்களின் அறிக்கை 18-28
- நிதிசார் கூற்றுக்கள்
  - குறித்த காலப்பகுதிக்குரிய விரிவான வருமான கூற்று 29
  - 2022.03.31 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று 30
  - குறித்த காலப்பகுதிக்குரிய உரிமை மாற்றக் கூற்று 31
  - குறித்த காலப்பகுதிக்குரிய காசுப்பாய்ச்சல் கூற்று 32
  - ஒருங்கிணைந்த தகவல், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் 33-54
- கூட்ட அறிவித்தல் 55
- பதிலாள் படிவம் 56

அறிமுகம்

கம்பனி பெயர்

லங்கா பொஸ்பேற் லிமிட்டட் (PB 308)

வாழ்விடம் மற்றும் சட்ட வடிவம்

லங்கா பொஸ்பேற் லிமிட்டட்டானது, அரசாங்க சுரங்க மற்றும் கனிய விருத்தி கூட்டுத்தாபனத்தின் எப்பாவெல பொஸ்பேற் கருத்திட்டத்தினைக் கையேற்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொதுக் கம்பனிகள் சட்டத்தின்படி பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களை மாற்றுகின்ற நியதிகளின்படி 1982 ஆம் ஆண்டின 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக 1992 ஜூலை 10 ஆம் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டது. எவ்வாறாயினும், கம்பனியானது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முதன்மை செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்.

வற்றாத விவசாயப் பயிர்களுக்கான வளமாக்கியாக பயன்படுத்தப்படுகின்ற பாறை பொஸ்பேற்றினை அகழுதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் என்பன கம்பனியின் முதன்மை செயற்பாடுகளாக விளங்குகின்றன.

பணிப்பாளர்கள் சபை

திரு.கே.எஸ்.ஐ. சுபசேன - தலைவர்

திரு.ஆர்.எம்.டப்.பண்டா - பணிப்பாளர்

திரு.ஏ.பி.மொரகொட - பணிப்பாளர்

திரு.டி.ஆர்.ரி.ருவனம்புர - பணிப்பாளர்

திரு.ஜே.ஏ.டப்.ஜயசூரிய - பணிப்பாளர்

திரு.சதாத் அபேவர்தன - பணிப்பாளர்

கம்பனி செயலாளர்

மெசெர் கல்ருப்கோ முகாமைத்துவ சேவைகள் (தனியார்) லிமிட்ட்ட்).
இல.06, பலஹெனலமுல்ல லேன், கொழும்பு 06

இறுதி தாய்க் கம்பனி

கம்பனியின் வழங்கப்பட்ட பங்குகள் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் திறைசேரியின் செயலாளரினால் முழுமையாக சொந்தமாக்கப்படுகின்றது.

வரிசை அமைச்சு

விவசாய அமைச்சு
80/5, "கொவிஜன மந்திரய"
ரஜமல்வத்தை லேன்,
பத்தரமுல்லை

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

இல.**73 1/1,** புதிய களனி பால வீதி,
கொழும்பு 14.
தொலைபேசி : **0112459906/7**
தொலைநகல் : **0112459908**

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்
இல.306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்ல

வரி ஆலோசகர்கள்

அமரசேகர அன்ட் கம்பனி.
பட்டய கணக்காளர்கள்
12, ரொடுன்டா தோட்டம்,
கொழும்பு 03.

வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
மக்கள் வங்கி
தேசிய சேமிப்பு வங்கி

பணிப்பாளர் சபை



திரு.கே.எஸ்.ஐ.சுபசேன
தலைவர்



திரு.ஆர்.எம்.டபிள்யூ.பண்டா
பணிப்பாளர்



திரு.ஏ.பி.மொரகொட
பணிப்பாளர்



திரு.டீ.ஆர்.ரி.ருவான்புர
பணிப்பாளர்




திரு.எஸ்.அபேவர்தன
பணிப்பாளர்



திரு.ஜே.ஏ.டபிள்யூ.ஜயசூரிய
பணிப்பாளர்

முகாமைத்துவ குழு



திரு.எச்.ஆர்யூ.டி.பண்டார
பொது முகாமையாளர்



திரு.ஆர்.எம்.பி.கருணாரத்ன
பிரதி பொது முகாமையாளர்



திரு.டி.ஜி.யூ.சாமர
நிதி முகாமையாளர்



திரு.எஸ்.டி.ரூபசிங்க
தொழிற்பாட்டு முகாமையாளர்



திரு.எம்.எம்.டி.திலகரத்ன
மனித வள முகாமையாளர்



கப்டன்.கே.ஜி.ஆர்.பி.கிரியெல்ல
சிரேஷ்ட முகாமையாளர்



திரு.டீ.ஆர்.கே.திலகரத்ன
கணக்காளர்



திரு.ஆர்.ஏ.ஏ.பி.ரணசிங்க
சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர்



திரு.டி.பி.கீரியவத்த
உள்ளக கணக்காய்வாளர்



திரு.எல்.எல்.டி.ஐ.பதும்
உற்பத்தி பொறியியலாளர்



திரு.ஏ.எம்.சனத் பண்டார
இயந்திரவியல் பொறியியலாளர்



திரு.எஸ்.ஏ.அபேசிறி
வழங்கல் உத்தியோகத்தர்



திரு.எஸ்.எம்.ஏ.ஆர்.கே.மஞ்சநாயக்க
ஆளணி உத்தியோகத்தர்
(நிருவாகம் மற்றும் மனித வளம்.)



திரு.டி.ஆர்.குணரத்ன
ஆலை உத்தியோகத்தர்



திரு.டி.எஸ்.எம்.திசாநாயக்க
களஞ்சிய உத்தியோகத்தர்

தலைவரின் கூற்று

பாறை போஸ்பேட் ஆனது விவசாயம் மற்றும் ஏனைய கைத்தொழில்களில் பல்வேறுபட்ட பயன்பாடுகள் மற்றும் பிரயோகங்களுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு முக்கியமான கனியவள மூலமாகும். போஸ்பேட் தாவர வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் தேவைப்படும் அவசியமான ஒரு ஊட்டச்சத்தாக விளங்குகின்றது. உலகளாவிய போஸ்பேட் நுகர்வு உரக் கைத்தொழிலிருந்து துப்பரவு செய்யும் பொருட்களின் கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில் மற்றும் ஏனைய பல கைத்தொழில்கள் வரை வேறுபட்டிருக்கின்றது. உலக சந்தையில் பாறை போஸ்பேட் ஆனது இரசாயன போஸ்பேட் உரத்துக்கான ஒரு 'சேதன பதிலீடு' ஆக ஏற்றுக்கொள்ளப்பட்டு சந்தைப்படுத்தப்படுகின்றது. அது மிகவும் இயற்கைதன்மை வாய்ந்ததுடன் நிலைபேறானது எனவும் அறியப்படுகின்றது.

உலக போஸ்பேட் படுகைகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவும் புதுப்பிக்க முடியாதவையாகவும் காணப்படுவதால் வினைத்திறனுடனும் அனுகூலமான மற்றும் நிலைபேறான அகழ்வு செயன்முறைகளோடு பயன்படுத்தப்படுதல் வேண்டும். எப்பாவல போஸ்பேட் படுகையானது P2O5இன் 33 – 40% உடன் கூடிய இலங்கையில் உள்ள பெறுமதிமிக்க இயற்கையான போஸ்பேட் இருப்பாகும். உலகிலுள்ள வளம் மிக்க மற்றும் தனித்துவமான போஸ்பேட் படுகைகளில் ஒன்றாக காணப்படுகின்றது. எப்பாவல போஸ்பேட் படுகையானது 1971 இல் கண்டுபிடிக்கப்பட்டது. 60 மில்லியன் மெட்ரிக் தொன் போஸ்பேட் உள்ளடங்கியருப்பதாக கணிப்பீடுகள் கூறுகின்றன. பாறை போஸ்பெட் உரமானது நாட்டில் உள்ளூர் போஸ்பேட் உரத் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக அகழ்வு மற்றும் செயன்முறைப் படுத்தலினூடாக வரையறுக்கப்பட்ட லங்கா போஸ்ட் (LPL) மூலம் தயாரிக்கப்படுகிறது. தற்போதைய கொள்ளவுடன் LPL உள்ளூர் தேவைக்காக வருடாந்தம் 50,000 மெட்ரிக் தொன் அளவு எப்பாவெல பாறை போஸ்பேட் (ERP) இனை உற்பத்தி செய்கின்றது. தனியார் மற்றும் பொது உரக் கம்பனிகள் ஊடாக விசவாயிகளை சென்றடைகிறது. தற்போது டுPடு நாட்டில் நிலையான பயிர்களுக்கான போஸ்பேட் உரமாக பாவிக்கப்படும் எப்பாவல பாறை போஸ்பேட் (ERP) மற்றும் உயர் தர எப்பாவல ரொக் போஸ்பேட் (HERP) எனும் பெயரில் இரு வகையான பாறை போஸ்பட் உரங்களை உற்பத்தி செய்கிறது. மேலும், LPL 2014 இலிருந்து வளமாக்கிகளினை கலவை செய்யும் பொறித் தொகுதியொன்றினையும் தொழிற்படுத்தி வருகின்றது.

லங்கா போஸ்பேட் லிமிடட் (LPL) ஆனது அரச நில அகழ்வு மற்றும் கனிய அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல போஸ்பேட் திட்டத்தை கையகப்படுத்துவதற்காக பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களை 1987ம் ஆண்டு 23 ஆம் இலக்க சட்டத்தின் படி பொதுக் கம்பனிகளாக மாற்றுதல் என்ற அடிப்படையில் 1982 17 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 1992 ஜூலை 10 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட பொறுப்புடமை கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது. அது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் திறைசேரி செயலாளரினால் முழுமையாக உடமையாக்கப்பட்டுள்ளது. LPL ஆனது 1998 நவம்பர் மாதம் 'போகல கிரபைட்' லிமிடட்டிலிருந்து வேறாகி முழுமையான சுயாதீன அமைப்பாக தொழிற்பட்டு வருகின்றது.

வளர்ச்சியடைந்த விவசாய அபிவிருத்தியின் ஊடாக ஆரோக்கியமான, உற்பத்தித் திறன் வாய்ந்த ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் கொள்கைத் திட்டமான 'சுபீட்சம் மற்றும் ஒளிமயமான கண்ணோட்டம்' இற்கு அமைவாக, LPL ஆனது நாட்டில் உரம் உற்பத்தி கைத்தொழிற் துறையில் முன்னணியான, அவசியமான ஒரு பங்களிப்பை வழங்கும் நிறுவனமாக அங்கம் வகிக்கின்றது. கம்பனியானது தற்போது கைத்தொழில் துறையில் முன்னணி வகிபாகத்தை அடைவதற்காக அதிகளவு தொழிநுட்ப முன்னேற்றம் மற்றும் உற்பத்தி

வளர்ச்சி நோக்கியதான செயன்முறையில் ஈடுபட்டு வருகின்றது.

முடிடைந்த 2021/2022 நிதியாண்டில் ரூபா.741 மில்லியன் மொத்தப் புரள்வினை அடையப் பெற்றுள்ளதுடன் இது கடந்த ஆண்டில் அடையப் பெற்றிருந்த ரூபா.750 மில்லியனுக்கு மிகவும் அண்மித்திருந்தது. அதேவேளையில், கம்பனியானது ரூபா.119.97 மில்லியனை தொழிற்பாட்டு இலாபமாகப் பதிவு செய்திருந்ததுடன் இது 2019/2020 இன் பின்னர், தொடர்ச்சியாக தொடர்ச்சியாக தொழிற்பாட்டு இலாபமாக அடையப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே, கம்பனியானது வரிக்கு முந்திய இலாபமாக ரூபா.157.03 மில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன் இது கடந்த ஆண்டு பெற்றிருந்த ரூபா.150 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 5% அதிகரிப்பாகும். கம்பனியானது தேயிலை, இறப்பர் பழங்கள் போன்ற பல்வேறு வகையான வளமாக்கி கலவைகளினை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், குறித்த ஆண்டில், சந்தையில் யூரியா மற்றும் MoP இன் பற்றாக்குறை காரணமாக இது சாத்தியப்படவில்லை.

எப்பாவெல பொஸ்பேட் படுகையினை உச்ச நிலையில் பயன்படுத்துவதற்காக, தற்போதிருப்பதனைப் பேன்றே புதிய வியாபார வாய்ப்புக்களை விருத்தி செய்வதற்கான தீர்வுகளை செயற்படுத்துவதற்காக கம்பனியின் பணிப்பாளர் சபையானது அதீத ஈடுபாட்டினைக் கொண்டுள்ளது. நாட்டின் மொத்த தேவைப்பாட்டினை நிவர்த்தி செய்வதற்காக குறுங்கால பயிர்களுக்கு எளிதில் கரையும் வகையில் வகையிலான பொஸ்பேட் வளமாக்கியின் முக்கியத்துவம் மற்றும் தேசிய தேவைப்பாடானது
அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் கைத்தொழிலில் அடுத்தகட்ட உடனடித் தேவைப்பாடாக தனி சிறப்பு பொஸ்பேற்றினை (SSP) தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஒரு பொறுப்பான அரச நிறுவனம் என்ற வகையில், LPL ஆனது, அரசாங்க கொள்கைகளுடன் இணங்கிய வகையில், எதிர்காலத்தில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளான Bio Green phosphate, Bio Film phosphate போன்ற சுற்றுப்புறச் சூழலுடன் நட்புறவான வளமாக்கிகளினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், அந்தந்த துறைகளில் உள்ள புதிய முன்னேற்றங்களை அறிந்துகொள்ள அனைத்து மட்ட ஊழியர்களுக்கும் தேவையான திறன்களை வளர்ப்பதற்கு மனித நட்புறவான பணிச்சூழல் மற்றும் பணியாளர் பயிற்சி திட்டங்களை அறிமுகப்படுத்த சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நிறைவாக, குறித்த ஆண்டு காலப்பகுதியில், கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் ஏனைய மட்டுப்படுத்தல்களினால் ஏற்பட்ட பல்வேறு தடைகளையும் தாண்டி கம்பனியானது அனைத்து சாதனைகளையும் நிலைநாட்டுவதற்கு தமது வழிகாட்டுதல், ஊக்குவிப்பு மற்றும் ஆதரவை வழங்கியமைக்காக அரசியல் தலைமைத்துவம், விவசாய அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் பணிப்பாளர் சபைக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

லங்கா பொஸ்பேற் லிமிட்டட்டின் எதிர்கால முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறுவதற்கு எனது மனமார்ந்த வாழத்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



கே.எஸ்.ஐ.சுபசேன
தலைவர்
லங்கா பொஸ்பேற் லிமிட்டட்

பணிப்பாளர் சபையின் அறிக்கை

லங்கா பொஸ்பேற் லிமிட்டடின் (கம்பனி) பணிப்பாளர் சபையானது 2022 மார்ச் 1 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை என்பனவற்றினை இத்தால் சமர்ப்பிக்கின்றது..

1.0 <u>கம்பனியின் பெயர்</u>

லங்கா பொஸ்பெற் லிமிட்டட் (பதிவு இல.PB 308)

2.0 <u>தாபனமும் சட்ட வடிவமும்</u>

லங்கா போஸ்பேட் லிமிடட் ஆனது அரச நில அகழ்வு மற்றும் கனிம அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல போஸ்பேட் திட்டத்தை கையகப்படுத்துவதற்காக பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களை 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின்படி பொது கம்பனிகளாக மாற்றுதல் என்ற அநியதிகளின்படி 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 1992 ஜூலை 10 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட பொறுப்புடமை கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது. எவ்வாறாயினும், அதனைத் தொடர்ந்து 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தன்னை மீளவும் பதிவு செய்து கொண்டுள்ளது.

3.0 <u>முதன்மைச் செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்</u>

இந்தக் கம்பனியின் முதன்மைச் செயற்பாடுகளாக, பொஸ்பேற் பாறைகளினைத் தோண்டுதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் என்பவற்றுடன் வற்றாத விவசாயப் பயிர்களுக்கு வளமாக்கிகளாகப் பயன்படுத்தப்படும் தெங்கு வளமாக்கிகளினைக் கலவை செய்தல் என்பன உள்ளடங்குகின்றன.

4.0 <u>நிதிக் கூற்று</u>

பணிப்பாளர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறான கம்பனியின் நிலவரங்களை உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றனவென திருப்தியடைகின்றனர்.

இவ்வாறான நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை பணிப்பாளர்கள் கருத்திற் கொள்கின்றனர். அவை தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படும் மற்றும் நியாயமான, கவனமான தீர்ப்பு மற்றும் மதிப்பீடுகள் மூலம் பலப்படுத்தப்பட்டவையாகும். அவர்கள் இந்த அறிக்கையில் வெளிப்படுத்துதலை உத்தரவாதப்படுத்தும் கணக்கீட்டுக் கொள்கைகளில் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றமும் காணப்படவில்லை என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றனர். கம்பனியின் சொத்துக்களை பாதுகாக்கவும், ஊழல் மற்றும் முறையற்ற செயற்பாடுகளைத் தடுக்கவும் கண்டுபிடிக்கவும் பொறுப்பானவர்கள் என்ற வகையில் பணிப்பாளர்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

5.0 <u>நிதிக் கூற்றுக்களும் கணக்கீட்டுக் கொள்கைகளும்</u>

இவ்வாறான நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படும் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் அவ்வாறே நியாயமான, கவனமான தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் பணிப்பாளர்கள் கவனத்திற் கொள்கின்றனர்;. எனவே, கொடுக்கல் வாங்கலின் அமைப்பும் சாரமும் முறையாக பிரதிபலிக்கின்றன. கணக்கீட்டுக் காலப்பகுதிக்குள் கணக்கீட்டுக் கொள்கைகளில் எவ்வித மாற்றமும் இல்லை.

6.0 ஆதனம், பொறி மற்றும் உபகரணமும் அவற்றின் பெறுமதியும் பெறுமானத் தேய்வும்.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீது கம்பனியால் ஏற்படுத்தப்பட்ட மூலதன செலவு ரூபா.6,759,332.00 ஆகும். ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் தகுதிநிலை மற்றும் நகர்வுகள், அவற்றின் பெறுமதி மதிப்பீடு மற்றும் பெறுமானத் தேய்வு விபரங்கள் நிதிக் கூற்றுகளின் குறிப்பு 5.0 மற்றும் குறிப்பு 26 இல் தரப்பட்டுள்ளன.

7.0 வரி விதிப்பனவு

கம்பனியானது மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், வியாபார வருமானத்தில் 18% மும் விரி விதிக்கத்தக்க வருமானத்தில் ஏனைய வருமானத்திற்கு 24% உமும் வரி விதித்துள்ளது.

8.0 பங்கிலாபம்

மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், ரூபா. 25.0 மில்லியன் இடைக்கால பங்கிலாபம் வெளிப்படுத்தப்பட்டது.

9.0 விலை கூறப்பட்ட மூலதனம்

கம்பனியின் விலை கூறப்பட்ட மூலதனமானது மொத்தமாக 7,251,000 சாதாரண பங்குகளினைக் கொண்டுள்ள ரூபா.72,10,000/- ஆகும். மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் விலை கூறப்பட்ட மூலதனத்தில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

10.0 பங்கு முதலீடு

பொது கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசுக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 2(3) இன் நியதிகளின்படி, அரசாங்கத்தின் சார்பில் ஏக பங்குதாரராக பொதுத் திறைசேரியின் செயலாளர் (அவரது உத்தியோகபூர்வ நிலையில்) விளங்குகின்றார்.

2022 மார்ச் 1 இலுள்ளவாறான, கம்பனியின் பங்குதாரர் விபரங்கள் பின்வருமாறு.

திறைசேரிக்கான செயலாளர் (அவரின் உத்தியோகபூர்வ பதவியில்) 7,251,000 சாதாரண பங்குகள்.

லங்கா போஸ்பேட் விமிட்டட் GSMB தொழிநுட்ப சேவைகள் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் ஒரு பங்குதார்ராகும். அது 100,000 சாதாரண பங்குகளை கொண்டிருக்கின்றது. (ஒவ்வொன்றும் ரூபா. 10/- ஆகும்)

குறிப்பிடப்பட்ட பங்கின் சதவீதம் 16.66% ஆகும்.

11.0 பங்கு முதலீட்டில் மாற்றங்கள்

2022.03.31 இலுள்ளவாறு கம்பனியின் பங்கு முதலீட்டில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

12..0 ஒருங்கிணைந்த சமூகப் பொறுப்பு

கம்பனியானது மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் தரும நோக்கங்கள் மற்றும் CSR இற்காக ரூபா.100,00/0/- இனைப் பங்களிப்புச் செய்துள்ளது.

13.0 ஊழியர்கள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில், ஆளணியின் மொத்தச் செலவு ரூபா.351,55,07.00 ஆக இருந்துள்ளது. குறித்த ஆண்டின் இறுதியில் கம்பனியினால் ஈடுபடுத்தப்பட்ட ஆட்களின் சராசரி எண்ணிக்கை 336 ஆகும்.

14.0 பணிப்பாளர்கள்

மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், பின்வரும் பணிப்பாளர்கள் பதவி வகித்துள்ளார்கள்.

திரு.கே.எஸ்.ஐ.சுபசேன - தலைவர்
திரு.ஆர்.எம்.விஜேசிங்க பண்டா - பணிப்பாளர்
திரு.ஏ.பி.மொரகொட - பணிப்பாளர்
திரு.டி.ஆர்.ரி.ருவன்புர - பணிப்பாளர்
திரு.ஜே.ஏ.டப்.ஜயசூரிய - பணிப்பாளர்
திரு.சுதத் அபேவர்தன - பணிப்பாளர்

15.0 பணிப்பாளர்களின் இராஜினாமாவும் நியமனமும்.

பொறியியலாளர் அனில் ரணசிங்க – தலைவர் (2021.08.02), திரு.என்.எம்.எஸ்.கருணதாச – பணிப்பாளர் (2022.03.03) குறித்த ஆண்டில் இராஜினாமாச் செய்துள்ளார் மற்றும், திரு.கே.எஸ்.ஐ.சுபசேன – தலைவர் (2021.08.02), திரு.ஆர்.எம்.விஜேசிங்க பண்டா (2022.03.03) 2021/22 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதிதாக நியமிக்கப்பட்டார்..

16.0 பணிப்பாளர்களின் வேதனம்

குறித்த மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் ரூபா.2,861,370/- ஆனது பணிப்பாளர்கள் வேதனம், கட்டணங்கள் மற்றும் செலவுகளாக செலுத்தப்பட்டுள்ளது.

17.0 நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் தமது அறிவுக்கெட்டிய வரையில், அரசாங்கம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றிற்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளதனை நம்பிக்கையுடன் திருப்தியடைகின்றனர்.

ஊழியர் செமலாப நிதியமானது சரியாகவும் உரிய நேரத்திலும் செலுத்தப்பட்டுள்ளது.

18.0 இணக்கப்பாடு

கம்பனியானது இலங்கையில் அல்லது வேறு எங்காவது ஏற்புடையதாகவுள்ள சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளினை மீறுகின்ற எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை..

19.0 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

கம்பனி எதிர்காலத்தில் தனது நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு போதுமான வளங்களைக் கொண்டிருக்கின்றது என்பதில் பணிப்பாளர்கள் திருப்தி கொள்கின்றனர். அதன்படி, கம்பனியின் அனைத்து நிதி அறிக்கைகளும் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

20.0 பெரு நிறுவன ஆளுகை

பணிப்பாளர் சபை சிறந்த பெருநிறுவன ஆளுகையை உறுதி செய்கின்றது. ஒரு பொது நிறுவனம் என்ற வகையில் செயலாற்றுகை கம்பனியின் நோக்கங்களோடும் அவ்வாறே அக்கறைதாரர்களின் நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு இணங்கிய வகையில் உள்ளன என உறுதி செய்வதும் பணிப்பாளர் சபையின் கடமையாகும்.

21.0 இடர் முகாமைத்துவம்

சட்ட ரீதியான இடருக்கு உள்ளாவது நீக்கப்பட்டுள்ளது அல்லது குறைக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப் படுத்த நியதி மற்றும் சட்ட ரீதியான தேவைப்பாட்டை கம்பனி மனச்சாட்சியுடன் நிறைவேற்றுகின்றது.

22.0 கணக்காய்வாளர்கள்

அரசாங்க கணக்காய்வாளர்கள், கம்பனியின் தற்போதைய கணக்காய்வாளர்கள் ஆவர்..

புதிய கணக்காய்வாளர்களின் வேதனத்தை தீர்மானிக்க பணிப்பாளர்கள் அதிகாரம் பெற்றுள்ளனர் என்பதனை முன்மொழியும் தீர்மானம் வருடாந்த பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

மீளாய்வு காலப்பகுதியில், 2022 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு, கம்பனியால் வழங்கப்பட்ட வருடத்திற்குரிய மொத்த கணக்காய்வுக் கட்டணம் ரூபா 400,000.00 ஆகும். குறித்த வருடத்தில் அமரசேகர மற்றும் கம்பனிக்கு வழங்கப்பட்ட வரி ஆலோசனைக் கட்டணம் ரூபா 220,500/- ஆகும்.

கணக்காய்வாளர்கள் கம்பனியோடு அல்லது அதன் துணைக் கம்பனிகளோடு அவர்களி;ன் சுந்திரத்தில் பாதிப்புச் செலுத்தும் வகையில் எவ்வித தொடர்பையும் கொண்டிருக்கவில்லை என்பதனை பணிப்பாளர்கள் முடியுமான வரையில் அறிந்து வைத்துள்ளனர்.

பணிப்பாளர் சபைக்காக.

தலைவர்


பணிப்பாளர்.

தொழிற்பாடுகளின் மீளாய்வு 2021/22


01. விற்பனைப் புரள்வு

குறித்த ஆண்டில் கம்பனியானது ரூபா.741.5 மில்லியன் விற்பனைப் புரள்வினைப் பதிவு செய்துள்ளதுடன் இது 2020/21 இல் காணப்பட்ட ரூபா.750.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் சிறியதொரு வீழ்ச்சியாகும்.

பெறுமதி (ரூபா.மில்லியன்)




அளவு (மெ.தொ)



02. **இலாபத்தன்மை**


தொழிற்பாட்டு இலாபம்

கம்பனியானது 2021/22 நிதியாண்டில் ரூபா.119.97 மில்லியன் தொழிற்பாட்டு இலாபத்தினைப் பதிவு செய்துள்ளது. இது 2020/21 இலிருந்து தொடர்ச்சியாக அடையப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.




வரிக்கு முந்திய இலாபம் (PBT)

2021/22 ஆம் நிதியாண்டில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா.157.03 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இது கடந்த ஆண்டில் ரூபா.150.0 மில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன் ஒப்பீட்டு ரீதியாக 5% அதிகரிப்பாகும்.




03. **<u>பங்குதாரர்கள் நிதியம்</u>**

வருட இறுதியில் தேறிய சொத்துக்களின் நிலையானது ரூபா.1.0 பில்லியனையும் விஞ்சியுள்ளதுடன் இது முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா.950.89 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 12% அதிகரிப்பாகும்..



04. **<u>மொத்த சொத்துக்கள்</u>**

குறித்த ஆண்டில் மொத்த சொத்துக்களின் பெறுமதியானது ரூபா.1.183 பில்லியன் வரையில் படிப்படியாக அதிகரித்துள்ளது. இதற்குப் பிரதான காரணம், குறித்த ஆண்டு காலப்பகுதியில் நிலையான வைப்புக்கள் மீதான முதலிடானது ரூபா.119 பில்லியனினால் அதிகரித்திருந்தமையே ஆகும்.



கருத்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு விருத்தி

I. வருடாந்தம் மற்றும் கம்பனியின் நிலையான வளர்ச்சிக்கேற்ப ரூபா.10.0 பில்லியனுக்கும் அதிகமான அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் வகையில், எப்பாவல பொஸ்பேட் படுகைகளைப் பயன்படுத்தி ஒற்றை விசேட்ட பொஸ்பெற்றினைத் (SSP) தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுயாதீன சாத்தியக்கூறு ஆய்வு 2021 இல் ஆரம்பிக்கபட்ட போதிலும் 2021 ஏப்பிரலிலிருந்து நாட்டில் இரசாயன வளமாக்கிகளைப் பயன்படுத்துவது தொடர்பான அரசாங்கக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக அவற்றினைத் தொடர முடியவில்லை. மேற்குறித்த ஆய்வானது 2021 செப்ரெம்பருக்குள் முடிவடையுமென எதிர்பார்க்கப்பட்டது.

II. 'எப்பாவல பொஹோர' என்ற பெயரில் சேதன பொஸ்பேற், சேதன -ஃபிலிம் பொஸ்பேற் மற்றும் நானோ பொஸ்பேற் போன்ற பல்வேறு வகையான உரங்களை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை பரிசீலிக்கிறேன்.

III. இயங்காத பொறிகள் மற்றும் இயந்திரங்களை மேம்படுத்தி பயன்படுத்தல் மற்றும் கம்பனியின் வழக்கமான அதாழிற்பாடுகுள்க்குப் பயன்படுத்துதல் (உதாரணம்: க்ரஷர் மெஷின் / கிரைண்டிங் மில் மெஷின் போன்றவை)

IV. தற்போதுள்ள உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், பாறை பொஸ்பேற்றின் தேசியத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, புதிய இயந்திரங்களை வாங்குதல் மற்றும் தளத்தில் உள்ள பொறிகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடுகளை திருத்தியமைத்தல்.

V. உற்பத்தித்திறன், துல்லியம் மற்றும் செயற்பாடுகளின் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க, தற்போதுள்ள கணக்கீட்டு மென்பொருள் பொதுயினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பொது முகாமையாளர்

நிதிசார் முக்கிய விடயங்கள்

குறித்த ஆண்டுகானது **(ரூபா. '000)**

	2021/22	**2020/21**	**2019/20**	**2018/19**	**2017/18**
வருமானம்	741,553	750,374	510,004	530,975	493,551
வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்)	157,030	150,582	13,480	29,694	16,594
குறித்த ஆண்டுக்கான தேறிய இலாபம் / (நட்டம்)	122,783	124,017	5,489	33,385	3,220
மொத்த விரிவான வருமானம்	147,631	117,494	18,821	109,726	(4,475)

ஆண்டு இறுதியிலுள்ளவாறு **(ரூபா. '000)**

	2021/22	**2020/21**	**2019/20**	**2018/19**	**2017/18**
பங்குதாரர் நிதியம்	1,068.519	950,888	831,378	771,646	669,834
தொழிற்படு மூலதனம்	798,299	685,183	528,312	477,360	419,904
மொத்த சொத்துக்கள்	1,183,605	1,099,694	948,648	892,603	757,572
பதவியினர் செலவு	351,356	325,078	303,310	292,861	230,782
ஊழியர்களின் எண்ணிக்கை (**எண்**)	336	325	333	328	333


பங்கொன்றுக்கு

	2021/22	**2020/21**	**2019/20**	**2018/19**	**2017/18**
சம்பாத்தியங்கள் (ரூபா.)	16.93	17.10	0.76	4.68	0.44

விகிதங்கள்

	2021/22	**2020/21**	**2019/20**	**2018/19**	**2017/18**
மொத்த இலாப பகிர்வு	46.8%	46%	37%	35.6%	36%
வரிக்கு முந்திய இலாப விகிதாசாரம்	21.2%	20.1%	2.6%	5.6%	3.4%
நடைமுறை விகிதம் (**தடவைகள்**)	13.97	10.70	14.56	11.67	11.09
பங்குதாரர் நிதியம் மீதான திரும்பல் (**%**)	11.49%	13.04%	0.66%	4.33%	0.48%

நிருவாக கட்டமைப்பு


ORGANIZATION STRUCTURE OF LANKA PHOSPHATE LIMITED (24-04-2015)
CHAIRMAN
GENERAL MANAGER
DEPUTY GENERAL MANAGER (NON PRODUCTION)
DEPUTY GENERAL MANAGER (PRODUCTION)
HM 2-1
HM 1-3
HM 1-1
MM 1-1
JM 1-1
MA 2-1
MA 1-1
PL 3
PL 2
PL 1
INTERNAL AUDITER
MACHANICALE ENGINEER
PRODUCTION MANAGER
PRODUCTION ENGINEER
MILL OFFICER
FINANCE MANAGER
ACCOUNTANT
STORE OFFICER
OPERETION MANAGER
HUMAN RESOURSCE MANAGER (ADMIN & HR)
PERSONAL AND ADMINISTRATIVE OFFICER
SECURITY MANAGER
ASST. SUPPLIES MANAGER
SUPPLIES OFFICER
ASST. MARKETING MANAGER
FOREMAN (MECHANICAL)
FOREMAN (CIVIL)
ASST. FIELD OFFICER
ASST. MILL OFFICER
ASST. Q.C OFFICER
ASSISTANT SECURITY OFFICER
ASST. PROCU. OFFICER
ASST. MKT. OFFICER
ASST. IT OFFICER
ASST. FINANCE OFFICER
BOOK KEEPER
STORE KEEPER
ASST. TRANSPORT OFFICER
GARDEN SUPERVISOR
ASST. WEL OFFICER
PERSONAL ASSISTANT
ADMIN & HR ASST.
MANAGEMENT ASSISTANT
MANAGEMENT ASSISTANT
MANAGEMENT ASSISTANT
MANAGEMENT ASSISTANT
MANAGEMENT ASSISTANT
MANAGEMENT ASSISTANT
MANAGEMENT ASSISTANT
MANAGEMENT ASSISTANT
MANAGEMENT ASSISTANT
MANAGEMENT ASSISTANT
WELDER/ FITTER
MOTOR MACHANIC
ELECTRICIAN
ASST. ELECTRICIAN
PUMP MAN
MASON
CARPENTER
STORE MAN
MINER
MACHINE OPERATOR
FORK LIFT OPERATO
MACHINE OPERATOR
ASST. MACHINE OPERATOR
SERVICEMAN (BAG CLOSER MACHINE)
LAB AIDET
SECURITY SERGENT
SECURIT GARD
SALESMAN
WHEEL LOORE OPERAT
DRIVER
MACHA -NICAL DRIVER
SERVICE MAN (VEHICLE)
CLEANER
TELEPHONE OPERATOR
BUNGL OKEEPE
LIBRARY ASSISTA
FIRST AIDER
OFFICE AIDE
GARDEN AIDE
MAINTENANCE AIDE
OFFICE AIDE
PRODUCTION AIDE
OFFICE AIDE
PRODUCTION AIDE
OFFICE AIDE
OFFICE AIDE
OFFICE AIDE
OFFICE AIDE
OFFICE AIDE
OFFICE AIDE
OFFICE AIDE
3/11/2019 3:30:49 PM

அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

வகையீடு	*சம்பள குறியீடு*	*பதவிப் பெயர்*	*பதவிகளின் எண்ணிக்கை*
உயர் முகாமையாளர்	HM - 2-1	பொது முகாமையாளர்	01
	HM - 1-3	பிரதி பொது முகாமையாளர் - உற்பத்தி	01
		பிரதி பொது முகாமையாளர் – உற்பத்திசாரா	01
	HM - 1-1	நிதி முகாமையாளர்	01
		உற்பத்தி முகாமையாளர்	01
		தொழிற்பாட்டு முகாமையாளர்	01
		நிருவாக மற்றும் மனிதவள முகாமையாளர்	01
இடைநிலை முகாமையாளர்	MM - 1-1	கணக்காளர்	01
		இயந்திர பொறியியலாளர்	01
		உற்பத்தி பொறியியலாளர்	01
		உள்ளக கணக்காய்வாளர்	01
		உதவி வழங்கல் முகாமையாளர்	01
		உதவி சந்தைப்படுத்தல் முகாமையாளர்	01
		பாதுகாப்பு முகாமையாளர்	01
கனிஷ்ட முகாமையாளர்	JM - 1 – 1	வழங்கல் உத்தியோகத்தர்	01
		நிருவாக உத்தியோகத்தர் (மனிதவள மற்றும் நிருவாகம்)	01
		ஆலை உத்தியோகத்தர்	01
		களஞ்சிய உத்தியோகத்தர்	01
முகாமைத்துவ உதவியாளர்	MA 2-1		28
	MA 1-1		30
ஆரம்ப மட்டம்	PL - 3		73
	PL - 2		80
	PL - 1		120
மொத்தம்			**349**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை

தொகுப்பு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகின்றதுடன் அது பணிப்பாளர் சபைக்கு பொறுப்புக் கூறக்கூடியதுமாகும். குழுவின் தலைவர் திறைசேரியினைப் பிரதிநிதித்துவம் செய்யும் பணிப்பாளர் ஆவார். வரிசை அமைச்சை பிரதிநிதித்துவம் செய்யும் பணிப்பாளர் மற்றும் ஏனைய நிறைவேற்றல்லாத பணிப்பாளர் பணிப்பாளர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர். அவ்வாறே கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் வரிசை அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் அவதானிப்பளர்களாக குழுவை பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

கூட்டங்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது, 2021/22 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொவிட் 19 நோய்த் தொற்றினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக மூன்று தடவைகள் கூடி குழுவில் முன்வைக்கப்பட்ட விவகாரங்களை கலந்துரையாடியது. குழுவானது பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகளை செய்வதற்காக உள்ளக கணக்காய்வாளரினால் சமர்பிக்கப்பட்ட காலாண்டு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்து மதிப்பீடு செய்துள்ளதுடன் தற்போதுள்ள கட்டுப்பாடுகள் தொடர்பிலும் பணிப்பாளர் சபைக்குப் பரிந்துரை செய்துள்ளது.

முடிவுரை

அறிக்கைகளை ஆழமாக பரிசீலனை செய்ததன் பின்னர், கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகள், நடவடிக்கை கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயற்பாடு தொடர்பாக குறித்துக் காட்டப்பட்ட விவகாரங்களை திருத்தியமைப்பதற்காக குழு முகாமைத்துவத்திற்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது. மேலும், சில முக்கியமான விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் பணிப்பாளர் சபைக்கு குறித்துரைக்கப்பட்டுள்ளன.



தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு
லங்கா பொஸ்பெற் லிமிட்டட்.

கணக்காய்வாளர்களின் அறிக்கை
தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. IMT/A/LPL/FA/2021-22/07 திகதி: 2022 நவம்பர் 08 ஆம் திகதி

தலைவர்,
லங்கா பொஸ்பேற் கம்பனி

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 இற்கு அமைவாக 2022 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான லங்கா போஸ்பேற் கம்பனியின் ("கம்பனி") நிதிக் கூற்றுகள் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1.நிதி அறிக்கைகள்

1.1 அபிப்பிராயம்

2022 மார்ச் 31 வரையான நிதி நிலமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றக் கூற்று, முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் உள்ளடங்கலாக 2022 மார்ச் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான லங்காக போஸ்பெட் லிமிடட் (கம்பனி) இன் நிதிக் கூற்றுகள் மீதான கணக்காய்வானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளோடு சேர்த்து வாசிக்கப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154(1) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் உறுப்புரை154 (6) இன் ஏற்பாடுகளுக்கமைவாக எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

2022 மார்ச் 31 இலுள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் அதன் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையானதும் நியாயமானதுமான ஓர் பார்வையினைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 கருத்துக்கான அடிப்படை

இலங்கையின் கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக நான் எனது கணக்காய்வை மேற்கொண்;டேன். அந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புகளாவன எனது அறிக்கையின் நிதி கூற்றுகள் பிரிவின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகளில் குறிப்பிடப்பட்டவையாகும். நான் பெற்றுக்கொண்ட கணக்காய்விற்கான ஆதாரம் எனது அபிப்பிராயத்தினை வழங்குவதற்கான அடிப்படையாக இருந்ததுள்ளதென நம்புகின்றேன்.

1.3.கம்பனியின் 2021 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விபரங்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு கையளிக்க எதிர்பார்த்திருக்கும் கம்பனியின் 2021 ஆண்டுக்கான அறிக்கையில் உள்ளடங்கப்பட்டிருக்கும் ஆனால் நிதி அறிக்கை மற்றும் அது தொடர்பான எனது கணக்கறிக்கையில் உள்ளடங்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என கருதப்படும். ஏனைய தகவல்கள் தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

நிதிக் கூற்று தொடர்பாகவும் எனது கருத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை என்பதோடு நான் அவை தொடர்பாக எவ்விதத்திலும் உறுதிப்படுத்தப்படவோ கருத்து கூறவோ இல்லை.

நிதிக் கூற்று தொடர்பாக எனது கணக்காய்வுக்கு அமைவாக, எனது பொறுப்பு யாதெனில் மேலே கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளுமிடத்து அவற்றை வாசித்துப் பார்க்கும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு வகையில் நான் பெற்றுக் கொண்ட அறிவின் அடிப்படையில் போதியளவு பொருந்துகின்றதா என்பதனை ஆராய்ந்து பார்ப்பதாகும்.

கம்பனியின் 2021 ஆண்டறிக்கையை வாசித்துப் பார்க்குமிடத்து, அதில் போதியளவு தவறான தகவல்கள் உள்ளன என நான் தீர்மானித்தால், அதனை பிழை திருத்துவதற்காக அவற்றை நிருவகிக்கும் தரப்பினரிடம் அந்த விடயங்கள் பரிமாறப்படுதல் வேண்டும். மேலும், பிழை திருத்தம் செய்யாது பிழையான தகவல்கள் உள்ளன என்றால், அவை அரசியலமைப்பின் 156 (4) உறுப்புரைக்கமைய என்னால் உரிய காலத்திற்குள் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படவுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.4 நிதிக் கூற்று தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் ஆளுகை புரியும் தரப்பின் பொறுப்புகள்

இலங்கையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் பக்கச்சார்பற்றதுமான பார்வையை வழங்கும் நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகும். ஊழல் அல்லது தவறின் காரணமாக தகவல்களை தவறுதலாக குறிப்பிடுவதிலிருந்து விடுபட்ட நிதி அறிக்கைகளை தயாரிப்பதை இயலுமாக்குவதற்கு தேவைப்படும் உள்ளக நிருவாகத்தின் தீர்மானம் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியை கலைக்க அல்லது நடவடிக்கைகளை நிறுத்த அல்லது செய்வதை தவிர யதார்த்தமான வேறு மாற்று இல்லை என எண்ணாத வரை நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது,தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு, வெளிப்படுத்துதல், பொருத்தமாயின் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையை பயன்படுத்தலோடு தொடர்புபட்ட விடயங்களை தொடர்ந்து மேற்கொள்ளுவதற்கான கம்பனியின் இயலுமையை மதிப்பீடு செய்யும் பொறுப்பு முகாமைத்துவத்தைச் சார்ந்ததாகும்.

ஆளுகை செலுத்த பொறுப்புச் சாட்டப்பட்டோர் கம்பனியின் நிதிக் கூற்று செயன்முறையை மேற்பார்வை செய்ய பொறுப்புடையவர்களாவர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவிற்கு அமைவாக, கம்பனியின் வருடாந்த மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்கு இயலுமான வகையில் சொந்த வருமானம், செலவு, சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையாக ஏடுகள், அறிக்கைகளை பராமரித்து வருதல்வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

எனது நோக்கம் யாதெனில் நிதி அறிக்கைகள் முழுமையாக ஊழல் அல்லது தவறு காரணமாக ஏற்படும் தகவல்களை தவறுதலாகக் குறிப்படுதல் என்பதிலிருந்து விடுபட்டுள்ளன என்பது பற்றிய நியாயமான உத்தரவாத்தை பெற்றுக் கொள்வதும் எனது கருத்தை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வாளர் அறிக்கையை வெளியிடுவதுமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் மட்ட உத்தரவாதமாகும். ஆனால் அது இலங்கையின் கணக்காய்வு தரங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வு தகவல்களை தவறாகக் குறிப்பீடுவதை எப்போதும் கண்டறியும் என உத்தரவாதப்படுத்தாது. தவறாகக் குறிப்பிடுதல் ஊழல் அல்லது பிழையின் காரணமாக ஏற்பட முடியும். அது தனிப்பட்ட ரீதியாக அல்லது மொத்தமாக தகவல் சார்ந்தாக கருதப்படும். இந்த நிதிக் கூற்றுகளின் அடிப்படையிலிருந்து பெறப்பட்ட பாவனையாளர்களின் பொருளாதார தீர்மானங்களில் அவை நியாயமாக பாதிப்புச் செலுத்தும் என எதிர்பார்க்க முடியும்.

இலங்கையின் கணக்காய்வு தரங்களுக்கு அமைவான ஒரு கணக்காய்வின் பகுதியாக, நான் கணக்காய்வின் ஊடாக தொழில்முறை சார்ந்த தீர்ப்பை செயற்படுத்தியிருப்பதோடு தொழில்முறை சார்ந்த ஐயுருவையும் பேணியிருக்கின்றேன். மேலும் நான்,

- ஊழல் அல்லது தவறு காரணமாக ஏற்படும் நிதிக் கூற்றுகளில் தகவலை தவறாகக் குறிப்பிடுவதன் இடர்களை இனங்கண்டு மதிப்பீடு செய்திருக்கின்றேன். அந்த இடர்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு செயன்முறைகளை வடிவமைத்து செயற்படுத்தியுள்ளேன். எனது கருத்துக்கு ஒரு அடிப்படையை வழங்கக்கூடிய போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு ஆதாரத்தை பெற்றுக் கொண்டுள்ளேன். ஒரு தவறிலிருந்து ஏற்படக்கூடிய தகவலை தவறாகக் குறிப்பிடுவதை விட ஊழல் காரணமாக ஏற்படக்கூடிய தவறாகக் குறிப்பிடுவதை கண்டுபிடிக்காதிருக்கும் இடர் மிகவும் கூடியதாகும். ஊழல் எனபது கூட்டுச்சதி, மோசடி, வேண்டுமென்றே தவிர்த்தல், திரிபுபடுத்தலகள் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை புறக்கணித்தல்; என்பவற்றோடு தொடர்புபடுகின்றது.

- சூழ்நிலைகளில் பொருத்தமான ஆனால் கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டின் பாதிப்புத் தன்மை பற்றி கருத்துக் கூறும் நோக்கமில்லாது கணக்காய்வு செயன்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புபட்ட உள்ளக கட்டுப்பாட்டை புரிந்து கொண்டேன்.

- கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவை முகாமைத்துவம் பயன்படுத்துவதன் பொருத்தப்பாடு, தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடர்ந்து மேற்கொள்வதற்கு கம்பனியின் இயலுமையில் குறிப்பிடத்தக்க ஐயத்தை எதிர்வுகூறக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலமைகளோடு தொடர்புபட்ட தகவல் சார்ந்த நிச்சயமற்றதன்மையாகவும் இருக்க முடியுமான பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஆதாரத்தின் அடிப்படையில் முடித்திருக்கின்றேன். தகவல் சார்ந்த நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என்ற நிலையில் நான் முடித்திருந்தால் நிதிக் கூற்றில் அறிக்கைகளோடு சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் பற்றி எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த நான் கேட்டுக் கொள்ளப்படுவேன். அல்லது சில வெளிப்படுத்தல்கள் போதுமற்றவையாக இருந்தால் எனது கருத்தை திருத்தியமைக்க நான் கேட்டுக் கொள்ளப்படுவேன். எனது முடிவுகள் கணக்காய்வு அறிக்கையில் இற்றைவரை நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வு ஆதாரத்தின் அடிப்படையிலே அமைந்துள்ளன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் கம்பனி தொடர்ந்து மேற்கொள்வதை நிறுத்த காரணமாகலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுகளின் மொத்த அறிமுகப்படுதல், கட்டமைப்பு, உள்ளடக்கத்தை மதிப்பீடு செய்திருக்கிறேன். பக்கச்சார்பற்ற அறிமுகப்படுத்தலை வழங்கும் வகையில் நிதிக் கூற்றுகள் அடிப்படையாகவுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றன.

எனது கணக்காய்வின் போது நான் இனங்கண்ட ஏனைய விடயங்களோடு குறிப்பிடத்தக்க கணக்காய்வு காண்புகள், உள்ளக கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் தொடர்பாக ஆளுகை செய்யயும் தரப்புக்கு அறிவித்திருக்கின்றேன்.

2. <u>சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறையான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை</u>

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்கான விசேட ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றன.

2.1.1 எனது ஆய்விலிருந்து வெளிப்படக்கூடிய மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163 (2) (ஈ) பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவு ஆகியவற்றின்

தேவைப்பாடுகளுக்கு அமைய கம்பனியால் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த முறையான கணக்கீட்டு பதிவுகளிலிருந்தும் கணக்காய்வுக்கு தேவைப்படும் அனைத்து தகவல்கள், விளக்கங்களை நான் பெற்றுக் கொண்டேன்.

2.1.2 சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iii) இன் தேவைப்பாடுகளுக்கு அமைய முன்னைய வருடத்தோடு உடன்பட்டுச் செல்கின்றன.

2.1.3 சமர்ப்பிக்கபட்ட நிதிக் கூற்றுகள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய முன்னைய வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்கியிருக்கின்றது.

2.2 பின்பற்றப்பட்ட வழிமுறைகள், பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் போதியளவான விடயங்களின் வரையறைக்குள் பின்வரும் விடயங்களில் எதுவும் எனது அவதானத்திற்கு வரவில்லை.

2.2.1 கம்பனியின் ஆளும் சபையின் எந்தவொரு உறுப்பினரும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய வியாபாரத்தின் சாதாரண விடயங்களுக்கு அப்பால் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு உடன்படிக்கையிலும் நேரடியான அல்லது மறைமுகமான நலனைக் கொண்டிருந்தார் எனக் குறிப்பீடு செய்தல்..

2.2.2 கம்பனி 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய, எழுத்து மூலமான சட்டம் அல்லது கம்பனியின் ஆளும் சபையால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட வழிகாட்டல்களுக்கு அமையாது செயற்பட்டிருத்தல்.

2.2.3 கம்பனி 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (உ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய அதன் அதிகாரங்கள், நடவடிக்கைகள், கடமைகளை செயற்படுத்தவில்லை எனக் குறிப்பீடு செய்தல்

2.2.4 கம்பனியின் வளங்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் விடயங்கள் தவிர, பொருளாதார ரீதியாக வினைத்திறனாகவும் தாக்ககரமாகவும் கொள்முதல் செய்யப்படவில்லை, பயன்படுத்தப்படவில்லை எனக் குறிப்பீடு செய்தல்.

2.3. <u>வேறு கணக்காய்வு அவதானங்கள்</u>

பின்வரும் அவதானங்கள் முன்வைக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் ரூ. 43,435,115/- தொகை செலவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட l6 Roller (TGM 160) புதிய ஆலை இயந்திரங்களை 2021 ஆகஸ்ட் மாதமாகின்ற போதும் பொருத்துவதற்கு அல்லது உற்பத்திக்கு பயன்படுத்திக் கொள்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதுடன், 2021 செப்டம்பர் மாதத்தில் பொருத்துதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு 2022 செப்டம்பர் மாதமாகின்ற போது உற்பத்திக்கு பயன்படுத்திக் கொள்வதற்கான ஆராய்ச்சி

மட்டத்தில் காணப்பட்டு வந்தது. 2022 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இதற்காக ரூ. 37,366,525/- தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன், இந்தச் செலவில் உள்ளடக்கப்பட்ட இயந்திரங்களை பொருத்துதல் என்பதாக காணப்பட்ட ரூ.7,440,000/- செலவுடன் தொடர்பாக எவ்வித நிர்மாணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அந்தச் செலவுகள் தொடர்பில் கணக்காய்வுக்கு உறுதியான வெளிப்படுத்தல்கள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

அதேபோன்று 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி எப்பாவலை களஞ்சியத்தின் TGM 160 இயந்திரத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 43,474,868 பெறுமதியான உதிரிப் பாகங்கள் காணப்பட்டதுடன் இதற்குள் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படாத ரூ. 5,243,502 பெறுமதியான உதிரிப் பாகங்களும் காணப்பட்டன. புதிய இயந்திரங்களை தயாரிப்பதற்கு இப்பாகங்களை ஏன் பயன்படுத்தவில்லை என்கின்ற விடயம் கணக்காய்வின் போது வாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்டதுடன் இவ் இயந்திரத்திற்காக ரூ. 15,597,212 பெறுமதியான உதிரிப் பாகங்கள் மீளாய்வு ஆண்டில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) நிருமாணிக்கப்பட்டு வந்த இவ் TGM 160 ஆலை இயந்திரத்திற்காக ரூ. 172,800 செலவு செய்யப்பட்டு Conveyor Belt 80 அடி (18"-05ply) ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், நிலையப் பரிசோதனையில் அதில் சேதமடைந்த இடங்கள் நிரப்பப்பட்டு மீளத் தயாரிக்கப்பட்டிருப்பதும், வெடிப்பு ஏற்பட்டு சேதம் ஏற்பட்டிருப்பதன் காரணத்தினால் நிருமாணிக்கப்பட்டு வருகின்ற புதிய இயந்திரத்திற்கு பொருத்துவதற்கு பொருத்தமானதாக காணப்படவில்லை என்பதால் அதை களஞ்சியத்தில் வைத்திருப்பனையும் காண முடிந்துள்ளது. அதற்குப் பதிலாக களஞ்சியத்தில் தறபோது காணப்படுகின்ற 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட (20*12mm) Conveyor Belt இல் 154 அடியில் 62 அடி இதற்காக பயன்படுத்தட்டிருந்தது. களஞ்சியத்தில் 154 அடி நீளமான Conveyor Belt சிறந்த நிலையில் காணப்பட்ட போதிலும் இவ்வகையில் ரூ 172,800 வீண் செலவினை செய்து மற்றுமொரு 80 அடி நீளமான Conveyor Belt ஒன்றினை கொள்வனவு செய்தமை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட பொருளானது பாவனைக்கு பொருத்தமானதல்ல என்பதும் கணக்காய்வில் கருத்து முரண்பாட்டிற்கு வழகோலய விடயமாகக் காணப்பட்டது.

(இ) அதிகரித்து வரும் வளமாக்கித் தேவைக்குப் போதுமான வளமாக்கியை வழங்குவதற்கும் பசளை இறக்குமதிச் செலவினை குறைப்பதற்கும் என்கின்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு ரூ. 34,654,178 தொகைக்கு புதிய இயந்திரம் ஒன்றாக பயன்படுத்தப்பட்ட 02 கெரஷர் இயந்திரங்கள் 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அவ் இயந்திரங்களில் எந்தவொரு

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

(இலங்கை ரூபாய்களில்)

24 உரிமை கோரப்படாத வர்த்தக கடன் கொடுத்தோர்கள்

2020.03.31 வரையில் வியாபார கடன் கொடுத்தோர்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா.7,015,967.35 தொகையானது 2020.03.31 இல் ஏனைய கடன் கொடுத்தோர் கணக்கிற்கு மாற்றப்பட்டது. 02 வருடத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதியில் வழங்குனர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்காமையால், கொண்டிருக்கும் பெறுமதி

விபரணம்	பேரேட்டின் படியான மீதி	அட்டவணையின் படியான மீதி	
2020 மார்ச் 31 இலுள்ளவாறான சீராக்கல்			*பொறுப்புக்களுக்குரிய தாக்கம்*
ஏனைய கடன்கொடுத்தோர்கள்	12,036,288	5,020,321	(7,015,967)
கொண்டிருகும்பெறுமதிகளில் மேற்கொள்ளப்பட்ட சிராக்கல்கள் - (2020 மார்ச் 31) - மிகை			**(7,015,967)**
			பொறுப்புக்களுக்குரிய தாக்கம்
நிறுத்தி வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் மு /செ	630,415,254	637,431,221	7,015,967
இலாப அல்லது நட்டக் கூற்றில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கல் - (2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது) - இலாப குறை மதிப்பீட்டு திருத்தம்)			**7,015,967**

25 மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் மீதான தவறவிடப்பட்ட வரி சீராக்கல்

	2021/22	*2020/21*
மீள் மதிப்பீட்டு மிகை (மோட்டார் வாகனமின்றி)	55,931,086	55,931,086
(-) வருட இறுதியிலுள்ளவாறான மீள் மதிப்பீடு தொகை மீதான தே	(12,827,945)	(8,551,964)
மீள் மதிப்பீட்டு இலாபம்	**43,103,141**	**47,379,122**
தவறவிடப்பட்ட வரிப் பொறுப்பு மு/செ	8,960,491	14,463,429
தவறவிடப்பட்ட வரிப் பொறுப்பு கீ/செ	8,153,990	8,960,491
OCI இற்கான ஆண்டுக்குரிய சீராக்கல் மற்றும் மீள் மதிப்பீட்டு ஒதுக்கங	**806,501**	**5,502,938**

26 பங்கொன்றிற்கான சம்பாத்தியம்

பங்கொன்றுக்கான அடிப்படை வருவாயைக் கணக்கிடுவது, சாதாரண பங்குதாரர்களுக்குக் கிடைக்கும் தேறிய இலாபத்தின் அடிப்படையில், வருடத்தில் வெளியிடப்பட்ட சராசரி பங்குகளின் சராசரி எண்ணிக்கையால்

சாதாரண பங்குதார்ர்குளுக்கு கிடைக்கக்கூடிய தேறிய இலாபம். (ரூப	122,782,789	124,017,192
சாதாரண பங்குகளின் நிறையிடப்பட்ட சராசரி (எண்ணிக்கை.)	7,251,000	7,251,000
பங்கொன்றுக்கான சம்பாத்தியம் (ரூபா.)	**16.93**	**17.10**

27. நிதிசார் இடர் முகாமைத்துவம்

கம்பனியின் செயற்பாடுகள் சந்தை இடர் (நாணயம் உள்ளிட்ட), வட்டி வீத இடர், விலை இடர், கடன் இடர், கலைத்தல் இடர் போன்ற பல்வேறுபட்ட நிதிசார் இடர்களுக்கு உட்படக்கூடியதாகும். கம்பனியின் மொத்த இடர் முகாமைத்துவ செயன்முறை நிதி இடரின் எதிர்வுகூற முடியாத தன்மையில் கவனத்தைக் குவித்து கம்பனியின் நிதி செயலாற்றுகையில் சாத்தியமான கடுமையான பாதிப்புகளை குறைக்க விளைகிறது.இடர் முகாமைத்துவம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் கீழ் நிதி திணைக்களத்தால் செயற்படுத்தப்படுகிறது.

கம்பனியின் பிரதான நிதிக் கூறுகள் குறுகிய கால வைப்புகள், நாணய சந்தை முதலீடுகள் மற்றும் காசு என்பவற்றை உள்ளடக்குகின்றன. இந்த நிதிக் கருவிகளின் பிரதான நோக்கம் கம்பனியின் நடவடிக்கைகளுக்காக கலைத்தலை அதிகரிக்கச் செய்து, பராமரிப்பதும் கம்பனியின் நிதி கையிருப்புகளில் வருவாயை கூட்டுவதுமாகும். கம்பனி அதன் வியாபார நடவடிக்கையினால் நேரடியாக எழக்கூடிய வர்த்தகதில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியவைகள் மற்றும் வர்த்தகத்தில் செலுத்த வேண்டியவைகள் போன்ற பல்வேறுபட்ட நிதிக் கருவிகளை கொண்டிருக்கின்றது.

(அ) கடன் இடர்

கடந்த கால நிலுவைகளோ அல்லது சேதங்களோ இல்லாத நிதிச் சொத்துக்களின் கடன் தரம் வெளியக கடன் மதிப்பீடுகள் (ஏதேனும் இருந்தால்) அல்லது எதிர்தரப்பு தவறு விகிதங்கள் பற்றிய வரலாற்று ரீதியான தகவல்களுக்கு குறிப்புரை செய்வதன் மூலம் மதிப்பீடு செய்ய முடியும். கடன் இடர் காசு, காசு சமதொகை பெறுமதிகள், வங்கி வைப்புகள் மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்து அவ்வாறே நிலுவையாகவுள்ள பெறப்பட வேண்டியவைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கலாக வாடிக்கையாளர்களுக்கான கடன் வெளிக்கொண்டு வருதல்களிலிருந்து உருவாகின்றது.

(ஆ) வர்த்தக பெறப்பட வேண்டியவைகள்

வர்த்தக பெறப்படவேண்டியவைகள் உள்ளூர் வாடிக்கையாளர்களை உள்ளடக்குகின்றது. தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் கடன் மதிப்பீடு பெறப்பட வேண்டிய கணக்குகளின் நிதி நிலமைகளின் மேல் செயற்படுத்தப்படுகின்றது. கம்பனி எந்தவொரு தனி எதிர்த்தரப்பு அல்லது எதிர்த்தரப்புகளின் குழுவுக்கான குறிப்பிடத்தக்க கடன் இடர் வெளிப்படுத்தலை கொண்டிருக்கவில்லை. கம்பனி கடன் விடயங்களை அனுமதிக்க முன் வாடிக்கையாளர்களை மதிப்பீடு செய்வதற்காக கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை தாபித்துள்ளது.

(இ) திரவத்தன்மை வாய்ந்த இடர்

காசுப் பாய்ச்சலை முன்னறிவிப்புச் செய்தலானது நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. தனது நடவடிக்கை சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்ய போதியளவு காசை கம்பனி கொண்டிருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியின் கலைத்தல் தேவைப்பாடுகளின் எதிர்வுகூறலை கம்பனி கண்காணிக்கும். வைத்திருக்கும் மிகை காசு மற்றும் தொழிற்படு மூலதன முகாமைத்துவத்திற்கு தேவைப்படும் மிகை மீதி வங்கி வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அறிக்கையிடும் தினத்தில் கம்பனி ரூபா 580,879,811 (31.03.2021 ரூபா 461,124,816) இனை வைப்பாக வைத்திருந்தது. அவை திரவத்தன்மை இடரை முகாமை செய்வதற்கு காசு உட்பாய்ச்சலைகளை தயார் நிலையில் பிறப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஈ) வட்டி வீத இடர்

அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள வைப்புகள் உள்ளடங்கலாக கம்பனி காசு மற்றும் வங்கி மீதியை வைத்திருக்கின்றது. உற்பத்தி வளைவின் போக்கு மற்றும் வட்டி வீத நகர்வினை தீவிரமாக கண்காணிப்பதன் மூலம் கம்பனி வட்டி வீத இடரை கண்காணிக்கின்றது.

(உ) மூலதன இடர் முகாமைத்துவம்

மூலதனத்தை முகாமை செய்யும் போது கம்பனியின் நோக்கங்களாவன, பங்குதாரர்களுக்கு வருமானங்களை வழங்குவதற்காக, ஏனைய நிலையான பங்குதாரர்களுக்கு நன்மைகளை வழங்குவதற்காக தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு கம்பனியின் இயலுமையை பாதுகாப்பதும் மூலதன செலவை குறைப்பதற்கு உகந்த மூலதன கட்டமைப்பை பராமரிப்பதுமேயாகும்.

28. மூலதன இணக்கப்பாடுகளும் எதிர்பாராத பொறுப்புகளும்

கம்பனியானது பின்வருவன நீங்கலாக பொருள்சார்ந்த மூலதன இணக்கப்பாடு மற்றும் எதிர்பாராத மூலதன பொறுப்புக்களைக் கொண்டிருக்கவில்லை.

	ரூபா..
- 2 ஜா கிறசர்கள் மீதான நிறுத்தி வைப்பு பணம் - (கெசர பொறியில் (தனியார் (லிமிட்டட்) – பிலியந்தலை]	4,386,358.40
- செலுத்தப்படாத காணிக் குத்தகை – வாரியபொல கருத்திட்ட காணிக்கான கலஹபிட்டிய பேமரத்ன தேரோ	300,000.00

28.1 நிதிசார் இணக்கப்பாடுகள்

பின்வருவன நீங்கலாக, அறிக்கையிடல் திகதியின் இறுதியில் செலுத்த வேண்டிய பொருள்சார் நிதி தொடர்பான இணக்கப்பாடுகள் எதுவும் காணப்படவில்லை.

	ரூபா.
-	
- மின்சார பட்டியல் கொடுப்பனவு – 2022 மார்ச்.	2,115,198.00
- இயந்திர வாடகை – Limac Multi Solutions	909,450.00
- WPP பை வழங்கல் தொடர்பில் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் - Central Polysack	1,596,000.00
- GSMB இற்கு செலுத்தத்தக்க அரசுரிமைக்	10,830,704.70

கட்டணம் - ஜன – மார்ச் 2022.	
- கனிம வரி – 2022 ஜன - மார்ச்	666,030.84
- செலுத்தப்படாத வாகன பழுதுபார்த்தல் கட்டணம் – யுனைற்றட் மோட்டர்ஸ் லிமிட்டட் - கொழும்பு	261,388.42

28.2 நிலுவையில் உள்ள வழக்கு

ஏற்பட்ட விபத்தொன்றுக்காக ரூபா.2.5 மில்லியன் இழப்பீட்டினைக் கோரி மூன்றாம் தரப்பினால் LPL/COU/03-1 மற்றும் LPL/COU/03-02 எனும் இலக்கங்களினைக் கொண்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

29. அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வு

இது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுத்தல் அல்லது சரி செய்தல் தேவைப்படும் நிதி நிலைமைக் கூற்று திகதியிலிருந்து எத்தகைய சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. அறிக்கையின் தேதியிலிருந்து எந்த சூழ்நிலையும் ஏற்படவில்லை.

30. தொடர்புடைய தரப்புக்களின் கொடுக்கல் வாங்கல்கள்

30.1 பிரதான முகாமைத்துவ ஆளணியுடனான கொடுக்கல் வாங்கல்.

சம்பந்தப்பட்ட தரப்புகள் என்பது திட்டமிடல், இயக்குதல், கம்பனியின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் என்பவற்றுக்கான அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டிருக்கும் நபர்களாகிய பிரதான முகாமைத்துவ அலுவலக ஆளணியினைக் குறிப்பிடுகின்றது. பிரதான முகாமைத்துவ ஆளணியினர் கம்பனியின் பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது. வருடத்திற்கான பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் இழப்பீடு பின்வருமாறு:

	2021/2022	2020/2021
	ரூபா.	ரூபா.
குறுகிய கால பயன்கள்	2,861,370	2,339,568

30.2 ஏனைய தொடர்புடைய தரப்புக்களுடனான கொடுக்கல் வாங்கல்.

நிதியாண்டு காலப்பகுதியில், இகநி 24 இன் கீழ், தொடர்புடைய தரப்புக்களாகளுடனான கொடுக்கல் வாங்கலென எவ்வித தரப்புக்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் அடையாளங் காணப்பட்டிருக்கவில்லை.

1. பெருநிறுவன தகவல்கள்

1.1 தாபனம் மற்றும் சட்ட முறைமை

லங்கா போஸ்பேட் லிமிடட் ('கம்பனி') 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். 1987 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க

சட்டத்திற்கு அமைவாக, அரச அகழ்வு மற்றும் கனிமப் பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல போஸ்பேட் கருத்திட்டமானது பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாக மாற்றப்பட்டது.

கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட காரியாலயமானது இல.73//1, புதிய பாலம் வீதி, கொழும்பு 14 எனும் முகவரியில் அமைந்துள்ளது. பாறை போஸ்பேட் (பொதுவான கனிமப்) படுகை எப்பாவலவில் அமைந்துள்ளது.

1.2 முன்மைச் செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

கம்பனியின் பிரதான செயற்பாடுகளாவன நிரந்தரமான விவசாய பயிர்களுக்கு உரமாக பயன்படுத்தப்படும் பாறை போஸ்பேட்டினை அகழ்தல், செயற்படுத்தல் மற்றும் விற்பனை செய்வதலாகும். மேலும், வளமாக்கியினை கலவை செய்யும் நடவடிக்கையை கம்பனி 2014 ஆம் ஆண்டு வாரியபொல, கனத்தேவெள என்ற இடத்தில் ஆரம்பித்தது.

1.3 . அறிக்கையிடும் காலப்பகுதி

நிதிக் கூற்றுக்களினால் உள்ளடக்கப்படும் காலப்பகுதியானது 2021.04.01 இலிருந்து 2022.03.31 வரையிலாகும்.

1.4 வெளியிடுவதற்கான அதிகாரமளிக்கும் திகதி

2022 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் கணக்காய்வாளர்களுக்கு வெளியிட 2022 ஜூலையில் அதிகாரமளிக்கபட்டடிருந்தன.

2. தயாரித்தலுக்கான அடிப்படை

2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

கம்பனியின் நிதிக் கூற்றுகள் (நிதி நிலமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்களின் கூற்று, குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகளின் சாரம்சத்துடனான பணப் பாய்ச்சல் கூற்று) இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் (இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்) மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 அளவீட்டின் அடிப்படை

நிதி நிலமை பற்றிய கூற்றில் பின்வரும் பொருள்சார்ந்த விடயங்கள் தவிர்த்து நிதி அறிக்கைகள் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- விற்பனைக்குள்ள நிதிச் சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.
- வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் பொறுப்பானது வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- கம்பனிக்கு வருமானத்தை ஈட்டித்தருவதற்கு பயன்படுத்தப்படும் போஸ்பேட் படுகைகள் சொத்துக்களின் பெறுமதி நம்பகமான முறையில் அளவிடப்படாமையினால் நிதி அறிக்கைகளில் சொத்தாக அங்கீகரிக்கப்படவில்லை.

2.தொழிற்பாட்டு ரீதியான மற்றும் நாணயம் சமர்ப்பிப்பு

நிதிக் கூற்றுகள் இலங்கையின் ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அது கம்பனியின் தொழிற்பாட்டு ரீதியானதும் சமர்ப்பிப்பு நாணயமாகும். இலங்கையின் ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து நிதி தொடர்பான தகவல்களும் அண்மைய ரூபாவிற்கு வரையறை செய்யப்பட்டுள்ளன.

2.4. ஒப்பீட்டுத் தகவல்

கணக்கீட்டுக் கொள்கைகளானவை கணக்கீட்டு நியமம் 01- நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தலிற்கு அமைவாக முன்னைய நிதி ஆண்டின் கொள்கைகளோடு கம்பனியினால் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படுகின்றன.

2.5. பொருள்மயப்படுத்தலும் திரட்டலும்

நிதிக் கூற்றுகளை சமர்ப்பிக்கும் போது கணக்கீட்டு நியமம் 01 இற்கு இணைவாக, ஒத்த விடயப்பொருளின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் நிதிக் கூற்றுகளில்வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படுகின்றது.வெவ்வேறு தன்மை கொண்ட விடயப்பொருட்கள் அல்லது செயற்பாடுகள் அவை பொருட்களாக இருக்குமாயின் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையை ஈடுசெய்வதற்கான சட்டரீதியாக அமுல்படுத்தப்படும் உரிமை இருக்குமாயின் மற்றும் தேறிய அடிப்படையில் முடித்துவைக்க அல்லது சொத்துக்களை அறிந்து கொண்டு ஏக காலத்தில் பொறுப்பை முடித்து வைப்பதற்கான எண்ணம் இருக்குமாயின் நிதி நிலமை கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தேறிய தொகையிலிருந்து ஈடு செய்யப்படுகின்றன. வருமானமும் செலவுகளும் ஏதாவது கணக்கீட்டு நியமங்கள் அல்லது வியாக்கியானத்தின் மூலம் வேண்டப்படாத அல்லது அனுமதியளிக்கப்படாத வரை விரிவான வருமான அறிக்கையில் ஈடுசெய்ய முடியாதவையாகும்.

3. குறிப்பிடத்தக்க கணக்கீட்டு தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

நிதி அறிக்கையை தயாரிக்கும் போது எதிர்காலத்துடன் தொடர்புபட்டவாறு குறிப்பிட்ட முக்கியமான கணக்கீட்டு அனுமானங்களை பிரயோகிப்பதை வேண்டி நிற்கின்றது. மேலும், அறிக்கையிடும் காலப்பகுதி முடிவில் அறிக்கையிடப்பட்ட வருமானத் தொகை, செலவுகள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் எதேச்சையான பொறுப்புகளை வெளிப்படுத்தல்களில் பாதிப்புச் செலுத்தும் தீர்ப்புகள், மதிப்பீடுகள், அனுமானங்களை வழங்குமாறு கம்பனியின் முகாமைத்துவத்தை வேண்டுகிறது. எவ்வாறாயினும், இந்த அனுமானங்கள், மதப்பீடுகளின் நிச்சயமற்றதன்மை எதிர்காலத்தில் சொத்துகளின் அல்லது பொறுப்பின் சுமந்து செல்லும் தொகையில் பொருள்சார்ந்த சரிபடுத்தல்களை வேண்டிநிற்கும் வெளியீடுகளில் விளைவினை ஏற்படுத்த முடியும். ஆகவே, உண்மையான அனுபவம் மற்றும் பெறுபேறுகள் இந்த தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும் செயன்முறையில், முகாமைத்துவம் நிதி அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைகளில் அதிகளவு குறிப்பிடத்தக்க பாதிப்பை கொண்டிருக்கும் பின்வரும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை ஏற்படுத்தியுள்ளது.

அ) வரி விதிப்பனவு

கம்பனி வருமான வரிகள் மற்றும் ஏனைய வரிகளுக்கு உட்பட்டிருக்கின்றது. குறிப்பிடத்தக்க தீர்ப்பு தற்போதைய, ஒத்திவைக்கப்பட்ட, நிதி அறிக்கையில் ளுடுகுசுளு இனை மேற்கொள்வதை கையாள்வதற்கான வரி வழிகாட்டல்கள் விவகாரத்தை நிலுவையில் வைத்திருக்கும் ஏனைய வரிகள் மற்றும் வரிகளை விதித்தல் எனும் நோக்கத்திற்காக வரி விதிக்க முடியுமான இலாபத்தின் மொத்த வழங்கலை தீர்மானிக்க வேண்டப்பட்டுள்ளது. இந்த நிதி அறிக்கையை தயாரிக்கும் காலப்பகுதியில் வரிச் சட்டங்களின் பொருத்தப்பாட்டை வியாக்கியானம் செய்தல் தொடர்பாக நிச்சயமற்ற நிலமைகளும் காணப்படுகின்றன..

மேலதிக வரிகள் நிலுவையில் இருக்கும் என்ற வகையில் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட தற்போதைய, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் பிற வரிகளுக்கான சொத்துக்கள், பொறுப்புகளை கம்பனி ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த விவகாரங்களின் இறுதி வரி வருமானம் ஆரம்பமாக அறிக்கையிடப்பட்ட தொகையிலிருந்து எங்கு வேறுபடுகின்றதோ, அவ்வாறான வேறுபாடுகள் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வருமானம், ஒத்திவைக்கப்பட்ட வரி தொகைகளில் பாதிப்பினைச் செலுத்துகின்றன.

ஆ) சொத்து மற்றும் சாதனங்களின் பயன்மிக்க ஆயுட்காலம்

கம்பனி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதிக்கும் எஞ்சிய பெறுமானங்கள், சொத்துக்கள் தேய்மானத்தின் பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் முறைமைகள் குறித்து மீளாய்வு செய்கின்றது. முகாமைத்துவத்தின் தீர்ப்பு இந்த பெறுமானஙகள், விகிதங்கள், முறைமைகளை மதிப்பீடு செய்கின்மையால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுகின்றன.

இ) தொடர்ந்து செல்வதற்கான எண்ணக்கரு

பணிப்பாளர்கள் தொடர்ந்து செல்வதற்கான எண்ணக்கருவைதொடர்ந்து முன்னெடுப்பதற்கான கம்பனியின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளனர். எதிர்காலத்திற்காக வியாபாரத்தை தொடர்ந்து மேற்கொள்வதற்கான வளங்களை கம்பனி கொண்டிருக்கின்றது என்பதில் திருப்தி கொள்கின்றனர். மேலும், தொடர்ந்து செல்வதற்கான எண்ணக்கருவை தொடர்வதற்கான கம்பனியின் இயலுமையில் குறிப்பிடத்தக்க சந்தேகத்தை எதிர்வுகூறக்கூடிய பொருள்சார்ந்த நிச்சயமற்ற தன்மை தொடர்பில் பணிப்பாளர் சபை அறிந்திருக்கவில்லை. கம்பனியின் நடவடிக்கைகளை கலைத்து விடுதல் அல்லது நிறுத்தி விடுவது பற்றி அவர்கள் எண்ணம் கொள்ளவில்லை. ஆகையால், நிதி அறிக்கைகள் தொடர்ந்து செல்வதற்கான எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றது.

ஈ) ஐந்தொகை திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

2022 மார்ச் 31 இலுள்ளவாறான நிலவரப்படி, நிறுவனத்தின் முடிவுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய பிந்தைய இருப்புநிலை நிகழ்வுகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

உ) நிதிச் சொத்துக்கள் மீதானபெறுமதி இழப்பு

கம்பனியானது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அல்லது அடிக்கடி மதிப்பீடு செய்து, ஒருபெறுமதி இழப்பானது விரிவான வருமானத்தின் அறிக்கையில் பதிவு செய்யப்பட வேண்டுமா என்பதுதொடர்பில் தேனும் புறநிலை ஆதாரம் உள்ளதா என்பதை தீர்மானிக்கிறது.

ஊ) விற்பனை முதலீட்டுக்காக உள்ளவற்றின் பெறுமதிக் குறைவு

கம்பனியானதுபெறுமதிக் குறைவு உள்ளனவா என்பதை மதிப்பீடுசெய்வதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் தினத்திலும் முதலீட்டு விற்பனைக்காகவுள்ள பங்கு நம்பிக்கை வகைப்படுத்தலுக்கு வழங்கப்பட்ட கடன் குறித்து கம்பனி மீளாய்வு செய்யும். இது கடன்கள் மற்றும் முற்பணங்களின் தனிப்பட்ட மதிப்பீடுகளில் பிரயோகிக்கப்படும் ஒத்த தீர்ப்பினை வேண்டி நிற்கின்றது.

எ) தவறகையிலுள்ள வரி சொத்துக்கள்

வரிக்குரிய இலாபங்கள் பயன்படுத்த முடியுமாகவுள்ள இந்த நட்டங்கள் / கடன்களுக்கு எதிராக இருக்கும் என்பது சாத்தியமாக நிகழக்கூடியது என்ற வகையில் தவறுகையிலுள்ள வரி சொத்துக்கள் அனைத்து விலக்களிக்க முடியுமான தற்காலிக வேறுபாடுகள், பயன்படுத்தப்படாத வரி இழப்புகள் மற்றும் வரிக் கடன்களுக்காக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எதிர்கால வரி திட்டமிடல் உபாயங்களோடு எதிர்கால வரிக்குரிய இலாபங்களின் சாத்தியமான நேர ஒதுக்கீடு மற்றும் மட்டம் என்பவற்றின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியுமான தவறகையிலுள்ள வரி சொத்துக்களின் தொகையை தீர்மானிக்க குறிப்பிடத்தக்க முகாமைத்துவ தீர்ப்பு வேண்டப்படுகிறது.

ஏ) பயன் திட்டங்களை வரையறை செய்தல்.

வரையறுக்கப்பட்ட இலாப திட்டங்களின் கொண்டு செல்லும் பெறுமதியானது நிபுணத்துவ அனுமானத்தைக் கருத்திற் கொள்ளும் ஒரு சூத்திரத்தை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. இது எதிர்காலத்தில் உண்மையான அபிவிருத்திகளிலிருந்து வேறுபடும் பல்வேறுபட்ட அனுமானங்களை மேற்கொள்வதோடு சம்பந்தப்படுகிறது. இவை கழிவு விகிதங்களை தீர்மானித்தல், எதிர்கால சம்பள அதிகரிப்பு, தொழிலாளர் புரழ்வு விகிதங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. மதிப்பீடு செய்வதன் சிக்கல் தன்மை, உள்ளார்ந்த அனுமானங்கள், அவற்றின் நீண்ட கால இயல்புத்தன்மை காரணமாக வரையறுக்கப்பட்ட இலாப கடப்பாடு இந்த அனுமானங்களில் மாற்றத்திற்கு மிகவும் முக்கியமானதாகும். அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன.

பொருத்தமான கழிவு விகிதங்களை தீர்மானிக்கும் போது, வரையறுக்கப்பட்ட இலாப கடப்பாட்டின் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியுடன் பொருந்திச் செல்லும் பொதுமைப்படுத்தப்பட்ட முதிர்வு இலங்கை அரசாங்கத்தின் அறுவடையை முகாமைத்துவம் கருத்திற் கொள்கிறது. எதிர்கால சம்பள அதிகரிப்புகள் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பணவீக்க விகிதங்கள் மற்றும் கம்பனியின் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்பு விகிதத்தை அடிப்படையாக கொண்டுள்ளன.

4. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு

நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது கம்பனியால் பிரயோகிக்கப்படும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கின்றன. கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த நிதி அறிக்கைகளில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து காலப்பகுதிகளிலும் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன.

4.1 வருமான அங்கீகாரம்

4.1.1 விற்பனைப் பொருட்கள்

பொருட்கள் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானமானது பின்வரும் நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படும் நிலையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது:

அ) விற்பனையாளர்கள் உடன்படிக்கையை (எழுத்து மூலம் அல்லது வாய்மொழி மூலம் அல்லது ஏனைய சம்பிரதாயபூர்வ வியாபார செயல்முறைகள்) அனுமதித்து அவர்களின் கடப்பாடுகளை நிறைவேற்ற ஈடுபாடு கொள்ளல்.

ஆ) கைமாற்றப்படவுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பாக ஒவ்வொரு தரப்பினதும் உரிமையை கம்பனி இனங்காண முடியுமாயின்,

இ) கைமாற்றப்படவுள்ள பொருட்கள் அல்லது சேவைகளுக்கான கொடுப்பனவு நிபந்தனைகளை கம்பனி இனங்காண முடியுமாயின்,

ஈ) உடன்படிக்கை வர்த்தகப் பொருளை கொண்டிருக்குமாயின்,

உ) வாடிக்கையாளருக்கு கைமாற்றப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான பரமாற்றத்திற்கு உரித்தான பணத்தை கம்பனி சேகரிப்பது சாத்தியமானதாக இருக்கும் போது,

4.1.2 வட்டி வருமானம்

நிலையான வைப்புகள் மற்றும் REPO முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம் நடைமுறையிலுள்ள வட்டி வீதத்தைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

4.1.3 பங்கிலாப வருமானம்

பங்கு இலாப வருமானமானது அவை பெற்றுக்கொள்ளப்படும் போது பங்கு இலாபத்தை பெறுவதற்கான கம்பனியின் உரிமை நிலைநாட்டப்படும் போது நடைமுறை அடிப்படையில் விரிவான வருமான அறிக்கையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. (தேறிய வருமானம்).

4.1.4 ஏனைய வருமானம்

ஏனைய வருமானமானது அவை நிகழும் போது உண்மையான அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

4.2 செலவின அங்கீகாரம்

ஏற்பட்ட செலவுக்கும் வருமானத்தின் விசேட பொருளின் ஆதாயத்திற்குமிடையிலான நேரடியான இணைப்பின் அடிப்படையில் செலவுகள் விரிவான வருமான அறிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. வியாபாரத்தை நடாத்திச் செல்லுதல், வினைதிறனாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைப் பாமாரிப்பதில் ஏற்பட்ட செலவானது விரிவான வருமான அறிக்கையில் கட்டணமாகக் கூறப்பட்டுள்ளன.

விரிவான வருமான அறிக்கையை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக, 'செலவின் செயன்முறை' முறைமையானது கம்பனியின் செயலாற்றுகையின் மூலக்கூறுகளை நியாயமாக சமர்ப்பிக்கின்றது என்ற

அடிப்படையில் பெறப்பட்டிருக்கின்றது. வருமான வரிச் செலவு தற்போதைய மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியை உள்ளடக்குகின்றது. வருமான வரிச் செலவு விரிவான வருமான கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

4.3 வரி விதிப்பனவு

4.3.1 தற்போதைய வரி

தற்போதைய வரிச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் நடப்பு வருடம் தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து மீளப்பெறுவதற்கு அல்லது செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகைகள் மற்றும் முன்னைய வருடத்தில் செலுத்தவுள்ள வரிக்கான சரிபடுத்தல்களை உள்ளடக்குகின்றது. வரி விகிதங்கள் மற்றும் தொகையை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் வரிச் சட்டங்கள் என்பது அறிக்கையிடும் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமானளவு இயற்றப்பட்டுள்ளவற்றை குறிக்கின்றது.

4.3.2. தவறுகையிலுள்ள வரி

தவறுகையிலுள்ள வரி என்பது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வரி அடிப்படைக்கும் நிதி அறிக்கையிடும் நோக்கத்திற்காக அவற்றின் கொண்டுசெல்லும் தொகைக்கும் இடையில் அறிக்கையிடும் திகதியில் தற்காலிக வேறுபாடுகள் மீதான பொறுப்பு முறைமையை பயன்படுத்தி வழங்கப்படுகின்றது.

தவறுகையிலுள்ள வரிச் சொத்துக்கள் அனைத்து விலக்களிக்க முடியுமான வேறுபாடுகளுக்கும் அங்கீகரிக்கப்படுகின்றன. பயன்படுத்தப்படாத வரிக் கடன்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகள் ஆனது கீழ் கொண்டு வரப்பட்ட வரிக்குரிய இலாபங்கள் விலக்களிக்க முடியுமான தற்காலிக வேறுபாடுகளுக்கு எதிராக இருப்பது சாத்தியமானது என்ற அளவில் பயன்படுத்தப்படாத வரிக் கடன்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகள் பயன்படுத்தப்படுகிறது.

தவறுகையிலுள்ள வரிச் சொத்தின் தொகையை கொண்டு செல்லல் ஒவ்வொரு அறிக்கையிடும் தினத்திலும் மீளாய்வு செய்யப்படுகின்றது. போதியளவு வரிக்குரிய இலாபம் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தை முழுமையாக அல்லது பகுதியளவு பயன்படுத்துவதற்கு அனுமதிக்க இருக்கும் என்பது சாத்தியமற்றது என்ற அளவில் குறைக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்படாத ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துகள் ஒவ்வொரு நிதி நிலமை தொடர்பான அறிக்கை தினத்தில் மீள் மதிப்பீடு செய்யப்படுகின்றது. எதிர்கால வரிக்குரிய இலாபம் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தை மீளப்பெறுவதற்கு அனுமதிக்கும் என்பது சாத்தியமானது என்ற அளவில் அவை அங்கீகரிக்கப்படுகின்றன.
தவறுகையிலுள்ள வரிச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் என்பது குறித்த வருடத்தில் அறிக்கையிடப்படும் தினத்தில் இயற்றப்பட்டிருக்கின்ற வரி விகிதங்கள், வரிச் சட்டங்களின் அடிப்படையில் சொத்துகள் உணரப்பட்டும் அல்லது பொறுப்புகள் முடிக்கப்பட்டும் இருக்கும் போது வருடத்தில் பிரயோகிப்பதற்கு எதிர்,பார்க்கப்படும் வரி வீதத்தில் மதிப்பிடப்படுகிறது.

4.4. நிதியல்லாச் சொத்து

4.4.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

அங்கீகாரமும் அளவீடும்

சொத்துடன் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தை நோக்கி பாயும் அதேநேரம் சொத்தின் செலவு கணக்கீட்டு நியமம் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு அமைவாக நம்பகரமாக மதிப்பீடு செய்ய முடியுமானதாக இருக்கும் என்பது சாத்தியமாயின் சொத்து மற்றும் சாதனம் அங்கீகரிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில், ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன கிரயத்திலேயே அளவீடு செய்யப்படுகின்றன.

கிரய மாதிரி

சொத்து மற்றும் சாதனம் என்பது நாளாந்த சேவைக்கான செலவுகள், குறைவாக திரட்டப்பட்ட தேய்மானம், பெறுமதியில் திரட்டப்பட்ட சேதம் என்பவற்றை தவிர்த்து கிரயத்தில் அல்லது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் அறிக்கையிடப்படுகின்றது. அங்கீகரிப்பதற்கான அளவீடுகள் பூரணப்படுத்தப் பட்டிருக்குமிடத்து செலவு ஏற்படும் போது சாதனத்தின் பாகம் ஒன்றை இடமாற்றுவதற்கான செலவையும் உள்ளடக்குகின்றது.

தொடர்ந்து வரும் கிரயம்

வியாபாரத்தை தொடர்ந்து மேற்கொள்ளல் அல்லது வியாபாரத்தின் ஆதாய கொள்திறனை அதிகரிப்பதற்கான சாதனங்கள் மூலம் நிலையான சொத்துக்களை பெற்றுக்கொள்ளல், நீடித்தல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக ஏற்பட்ட தொடர்ந்து வரும் செலவு மூலதனச் செலவாக கருதப்படும். செலவுகள் சொத்தின் கொண்டு செல்லும் தொகையில் அங்கீகரிக்கப்படும். சொத்து மற்றும் சாதனத்தின் நாளாந்த சேவையுடன் இணைந்த செலவு விரிவான வருமான அறிக்கையில் ஏற்பட்ட செலவு என அங்கீகரிக்கப்படும்.

தேய்மானம்

தேய்மானம் என்பது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கணிப்பீடு செய்யப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலத்திற்கு மேலாக மிகை பெறுமதிக்கு அவற்றின் செலவை குறிப்படுவதற்கு நேர்க்கோட்டு முறைமையை பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றது. தேய்மானம் பொருள் பாவனைக்காக இருக்கும் போது ஆரம்பிக்கின்றது. காணி பெறுமதி குறையாது. மதிப்பீடு செய்யப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலத்தின் அடிப்படையில் தேய்மான வீதங்கள் பின்வருமாறு:

சொத்துக்களின் வகையீடு	**தேய்மானம் (%)**
கட்டிடம்	04
பொறி மற்றும் இயந்திரம் மற்றும் மின்சார உபகரணம்	10
மோட்டார் வாகனம்	20
அலுவலக உபகரணம்	20
தளபாடமும் பொருத்துக்களும்	20
கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள்	20
காணி மற்றும் காணி விருத்தி	05

சொத்தின் மிகை பெறுமானங்கள், பயன்மிக்க ஆயுட்காலம், தேய்மான முறைமைகள் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் மீளாய்வு செய்யப்பட்டு சரிபடுத்தப்படுகின்றன. எந்த சொத்தினதும் பெறுமதி தொழிநுட்ப மாற்றத்தின் அடிப்படையில் அல்லது வேறு காரணங்களுக்காக குறிப்பிடத்தக்களவு மாற்றமடையுமாயின், பொருளின் இயல்புத்தன்மை, பெறுமதியை கருத்திற் கொண்டு கம்பனியின் வருமானத்திற்கு எதிரான மாற்றமோ அல்லது நியாயமான அடிப்படையில் குறை மதிப்பீடோ செய்யப்படுதல் வேண்டும். (கையடக்கத் தொலைபேசிகள், கமராக்கள்)

சொத்துக்களின் மொத்த பெறுமதி ரூபா. 5000/- இற்கு மேற்பட்டதாயின் நிதிக் கூற்றில் நிலையான சொத்தாக ஏற்றுக் கொள்ளப்பட முடியும். எந்த சொத்தினதும் பெறுமதி ரூபா 5000/- இற்கு குறைவாயின், அது பொருள் சாராத ஒன்றாகவும் கம்பனியின் வருமானத்திற்கு நிகரான கட்டணமாகவும் கருதப்படுகின்றது. எதிர்கால ஒப்புநோக்கல் நோக்கத்திற்காக சம்பந்தப்பட்ட திணைக்களத்தினால் ஒரு பதிவேடு பராமரிக்கப்படுதல் வேண்டும்.

அங்கீகாரத்தை நீக்கிக்கொள்ளல்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை அகற்றுவதன் மூலம் அல்லது அவற்றை பயன்படுத்துதன் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகளை எதிர்பார்க்க முடியாது எனும் போது அவற்றுக்கான அங்கீகாரம் நீக்கப்படுகின்றது. சொத்தின் அங்கீகாரத்தை நீக்கிக் கொள்வதன் மூலம் ஏற்படும் வரவு அல்லலு செலவு (தேறிய அகற்றல் வருமானம் சொத்தின் பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினால் கணிப்பிடப்படுகிறது) ஏனைய செயற்பாட்டு வருமானமாக வருடத்திற்கான விரிவான வருமான கூற்றில் ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தின் கீழ்குறிப்பிடப்படுகிறது.

4.4.2 நிதியற்ற சொத்தின் சேதம்

கம்பனி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியில் ஒரு சொத்து சேதமாக்கப்பட்டிருக்கலாம் என்ற குறிப்பை மதிப்பீடு செய்கின்றது. ஏதாவது குறிப்பு காணப்படுமாயின், அல்லது ஒரு சொத்துக்கான வருடாந்த சேத பரிசோதனை தேவைப்படுமாயின், கம்பனி சொத்தின் மீளப்பெற முடியுமான தொகையை மதிப்பீடு செய்யும்.

4.5 தொழிற்படும் குத்தகை

குத்தகை காலப்பகுதியில் உடமைத்துவத்தின் அனைத்து இடர்கள் மற்றும் நன்மைகளை கணிசமானளவு குத்தகைக்கு விடுபவர் காத்திரமாக தக்கவைத்திருக்கும் குத்தகைகள் தொழிற்படும் குத்தகைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. தொழிற்படும் குத்தகைக் கட்டணங்கள் குத்தகை காலப்பகுதியில் நேர்க்கோட்டு முறை அடிப்படையில் அல்லது குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்திலிருந்து பொருளாதார நன்மைகள் அடையப்படும் கால முறையை அதிகளவு பிரதிநிதித்துவம் செய்கின்றது என்ற அடிப்படையில் செலவு என அங்கீகரிக்கப்படுகின்றது.

4.6 கையிருப்புகள்

கையிருப்புகள் குறைவான கிரயம் மற்றும் தேறிய கொடுக்கப் பெறக்கூடிய பெறுமதியில் குறிப்பிடப்படுள்ளது. கிரயமானது உற்பத்தி செலவில் எடையிடப்பட்ட சராசரியை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. போஸ்பேட் கையிருப்புகளை பெறுமதி மதிப்பீடு செய்யும் போது சுரங்கத்தின் செலவின் 40% பங்கீடு 'நொறுக்கப்பட்ட' உற்பத்திக்கான தொழிற்பாடாகவும் (செயற்படுத்தப்படாத) 60% மிகுதி பங்கீடு 'நிலத்தள' உற்பத்திக்கான (செயற்படுத்தப்பட்ட) தொழிபாடாகவும் இருந்தது. கிரய மதிப்பீட்டின் பிறகு வியாபாரத்தில் ஆரம்ப இருப்பின் விலை தேறிய பெறுமதி எனப்படும். வழக்கற்றுப்போன, மெதுவாக நகரும், குறைபாடுள்ள கையிருப்புகளுக்காக அவசியமான ஏற்பாடுகள் செய்யப்பட்டள்ளன.

4.7. இனங்காணல், அளவீடு செய்தல், சேதங்களை மதிப்பிடல்

தள்ளுபடி செய்யப்பட்ட செலவு, ஏனைய முழு வருமானத்தின் ஊடான நியாயமான பெறுமதியில் அல்லது பின்வரும் இரு அடிப்படைகளின் கீழ் இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயமான பெறுமதியில் அடுத்தடுத்து மதிப்பீடு செய்யப்பட்டவை என்றவகையில் கம்பனி நிதிச் சொத்துகளை வகைப்படுத்தும்.

(அ) நிதிச் சொத்துகளை முகாமை செய்வதற்கான கம்பனியின் வியாபார மாதிரி

(ஆ) நிதிச் சொத்தின் உடன்படிக்கை சார்ந்த பணப் பாய்ச்சலின் பண்புகள்.

பின்வரும் இரு சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்தொன்று தள்ளுபடியான செலவாக மதிப்பிடப்படுகிறது.

(அ) உடன்படிக்கை சார்ந்த பணப் பாய்ச்சலை சேகரிப்பதற்காக வியாபாரத்திற்குள்ளே இருக்கும் நிதிச் சொத்து.

(ஆ) நிதிச் சொத்தின் உடன்படிக்கை சார்ந்த நிபந்தனைகள் தனியாக மூல கொடுப்பனவுகள் மற்றும் நிலுவையாகவுள்ள மூல தொகை மீதான வட்டி பணப் பாய்ச்சலில் குறிப்பிட்ட திகதியில் அதிகரிப்பை ஏற்படுத்துகிறது.

பின்வரும் இரு சந்தர்ப்பங்கள் காணப்படுமாயின், ஒரு நிதிச் சொத்து ஏனைய விரிவான வருமானத்தின் ஊடான நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்படுகிறது.

(அ) உடன்படிக்கை சார்ந்த பணப் பாய்ச்சலை சேகரித்தல் மற்றும் நிதிச் சொத்துகளை விற்பனை செய்தல் என்ற நோக்கத்தில் வியாபாரத்திற்குள்ளே இருக்கும் நிதிச் சொத்து

(ஆ) நிதிச் சொத்தின உடன்படிக்கை சார்ந்த நிபந்தனைகள் தனியாக மூல கொடுப்பனவுகள் மற்றும் நிலுவையாகவுள்ள மூல தொகை மீதான வட்டிப்பணப் பாய்ச்சலில் குறிப்பிட்ட திகதியில் அதிகரிப்பை ஏற்படுத்துகிறது.

4.8. காசு மற்றும் வங்கி மீதிகள்

காசு மற்றும் வங்கி மீதிகள் என்பது கையிலிருக்கும் காசு மற்றும் வங்கி மிகுதிகள் என வரையறை செய்கின்றது.

காசுப் பாய்ச்சல் நோக்கத்திற்காக, காசும் காசு சம பெறுமதிகளும் கையிலிருக்கும் காசு மற்றும் நிலுவையாகவுள்ள வங்கி மேலதிக பற்றின் தேறிய வங்கி வைப்புகளை உள்ளடக்குகின்றது.

கம்பனி கொவிட் 19 தொற்றின் கீழ் தடைபடாத செயற்பாடுகளை உறுதிசெய்வதற்காக நிலையான வைப்புகளுக்கு நிகராக கிராண்ட்பாஸ் இலங்கை வங்கியிடமிருந்து (ரூபா.35.0 மில்லின்) மற்றும் எப்பாவல மக்கள் வங்கியிடமிருந்து (ரூபா.8.0 மில்லியன்) நிலையான வங்கி மேலதிக பற்றுகளை பெற்றுக் கொண்டது.

4.9. குறித்த மூலதனம்

சாதாரண பங்குகள் உரிமைப் பங்குகளாக வகைப்படுத்தப்படுகின்றன. உரிமை ஆவணங்கள் காசின் நியாயமான பெறுமதியில் அல்லது பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள ஏனைய வளங்களில், உரிமையாண்மை ஆவணங்களை விநியோகிக்கும் நேரடி செலவுகளின் தேறிய வருமானத்தில் அளவிடப்படுகின்றது.

4.10 இழைப்பாறல் பயன் கடப்பாடுகள்

4.10.1 வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் – பணிக்கொடை.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின்படி பணிக்கொடையை செலுத்தவது கம்பனியின் பொறுப்பாகும், இதன்படி, 5 ஆண்டுகள் தொடர்ந்து சேவை செய்த பிறகு மட்டுமே பணிக்கொடை செலுத்த வேண்டிய கட்டாயம் எழுகிறது. கணக்கியல் அனுமானங்களின் கீழ் ஒரு ஆக்சுவரி மூலம் திட்டமிடப்பட்ட யூனிட் கிரெடிட் முறையைப் பயன்படுத்தி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனுமானம் மற்றும் வழிமுறையின் அடிப்படையில் சேவையில் உள்ள ஊழியர்களைப் பொறுத்த வரையில், 31 மார்ச், 2022 இல் வரையறுக்கப்பட்ட பலன் கடமையின் தற்போதைய மதிப்பு ரூ. 31,310,870.00. 31 மார்ச் 2021 இன் படி திட்டமிடப்பட்ட யூனிட் கிரெடிட் முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்ட PVDBO ரூ. 56,318,245.00. கிராண்ட்பாஸ் கிளையின் இலங்கை வங்கியில் நிலையான வைப்புத்தொகை மூலம் பொறுப்பு வெளிப்புறமாக நிதியளிக்கப்படுகிறது. ஆண்டு இறுதியில் நிலையான வைப்புத்தொகையின் மதிப்பு ரூ.70,367,735.96. ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் நிர்ணயிக்கப்பட்ட பொறுப்பின் அடிப்படையில், முதலீடு செய்யப்பட்ட தொகை ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

4.10.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமானது ஒரு நிறுவனம் நிலையான பங்களிப்புகளை வேறொரு நிறுவனத்திற்கு வழங்குவது, மேலதிக தொகையை வழங்குவதற்கு சட்டரீதியான அல்லது நிர்மாணகரமான கடப்பாட்டை கொண்டிருக்காமையின் கீழான ஒரு பிந்திய-தொழில் நன்மை திட்டமாகும். வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கான பங்களிப்புக்கான கடப்பாடுகள் ஊழியர்களினால் வழங்கப்பட்ட சேவை காலப்பகுதிக்குள் முழு வருமான கூற்றில் ஊழியர் நலச் செலவு என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

அ. ஊழியர் சேமலாப நிதியம்

கம்பனியும் ஊழியர்களும் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதிக்கு ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தில் முறையே 12% மற்றும் 10% என்ற அடிப்படையில் பங்களிப்புச் செய்கின்றனர்.

ஆ. ஊழியர் நம்பிக்கை நிதியம்.

கம்பனி ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தில் 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதிக்கு பங்களிப்புச் செய்கின்றது

4.11 நிதிப் பொறுப்புக்கள்

பின்வருவன தவிர்த்து கம்பனி அனைத்து நிதிப் பொறுப்புகளையும் தள்ளுபடி செய்யப்பட்ட செலவில் அடுத்தடுத்து மதிப்பீடு செய்யப்பட்டதாக வகைப்படுத்துகின்றது.

(அ) இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயமான பெறுமதியில் உள்ள நிதிச் பொறுப்புகள்

(ஆ) ஒரு நிதிச் சொத்தின் கைமாற்றம் அங்கீகாரத்தை நீக்கிக்கொள்வதற்கு தகுந்ததாக இருக்காதவிடத்து அல்லது தொடர்ச்சியான தலையீட்டு அனுகுமுறை பிரயோகிக்கப்படும் போது எழுகின்ற நிதிப் பொறுப்புகள்.

4.12 ஏற்பாடுகள்

கம்பனி கடந்த கால நிகழ்வின் விளைவாக நிகழ்கால கடப்பாட்டை (சட்ட அல்லது நிருமாணகரமான) கொண்டிருக்கும் போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. பொருளாதார நலன்களை உருவமைக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் என்பது சாத்தியமாகும். ஒரு நம்பகரமான மதிப்பீடு கடப்பாட்டின் தொகையை மேற்கொள்வதற்கு முடியும். ஏதாவது ஏற்பாட்டுடன் தொடர்புபட்ட செலவு தேறிய முழு வருமானத்திலிருந்து மீள்நிரப்பப்பட்டுள்ளது.

4.13. காசு பாய்ச்சல் கூற்று

காசு பாய்ச்சல் கூற்று இலங்கை கணக்கீட்டு நியமம் 7- காசு பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மறைமுகமான வழிமுறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருக்கின்றது. காசும் காசுக்குச் சமமான பெறுமதிகளும் கையிலிருக்கும் காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கி மேலதிக பற்றை உள்ளடக்குகின்றன.

4.13 துண்டமாக்கப்பட்ட தகவல்கள்

துண்டமாக்கல் என்பது சேவைகளை வழங்குவதில் தொழிற்பட்ட ஒரு தனித்துவமான கூறாகும். அது ஏனைய வகைகளுக்கு மாறுபட்டதான இடர்கள் மற்றும் வருமானத்துடன் சம்பந்தப்பட்டதாகும். அனைத்து நடவடிக்கைகளும் ஒரு வகையாக கவனிக்கப்படும் போது ஒரு வகையாக அடையாளப் படுத்தப்பட்டிருப்பதற்கு தனித்துவமான கூறினை கம்பனி கொண்டிருக்கவில்லை.

கூட்டம் பற்றிய அறிவித்தல்

லங்கா போஸ்பேட் லமிடட்டின் பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் இல. 73/1/1, புதிய களனி பாலம் வீதி, கொழும்பு 14 என்ற முகவரியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 2022 டிசம்பர் 19 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு பின்வரும் நோக்கங்களுக்காக நடாத்தப்படவுள்ளது என்பதனை லங்கா போஸ்பேட் லிமிடட்டின் பங்குதாரர்களுக்கு இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

1. 2021 டிசம்பர் 22 ஆம் திகதி நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தின் குறிப்புகளை உறுதிப்படுத்தல்.
2. 2022.03.31ல் முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு கூற்று, 2022.03.31 இல் உள்ளபடியான ஐந்தொகை, கணக்காய்வாளர்களின் அறிக்கையை பெற்றுக்கொள்ளல், கவனத்திற் கொள்ளுதல், ஏற்றுக் கொள்ளுதல்
3. வருடாந்த அறிக்கையை பெற்றுக் கொள்ளுதல், கவனத்திற் கொள்ளுதல், ஏற்றுக் கொள்ளுல்.
4. கம்பனியின் ஏக பங்குதாரரான திறைசேரிக்கு பணிப்பாளர் சபையால் பரிந்துரை செய்யப்பட்ட 2021/22 நிதியாண்டுக்கான பங்கு இலாபத்தை அறிவித்தல்.
5. கம்பனியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 92 மற்றும் 93 இன் படி, ஓய்வு பெற்ற பணிப்பார்களை (வருடாந்திர பொதுக் கூட்டத்தில்) மீண்டும் தெரிவு செய்தல் மற்றும் கம்பனியின் அமைப்பு அகவிதியின் உறுப்புரை 94 இன்படி, தகுதியானவர்களை மீளவும் தெரிவு செய்தல்.
6. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை கம்பனியின் 2022/23 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளராக அறிவித்தல்.
7. அறிவித்தல் வழங்கப்பட்டிருக்கின்ற ஏனைய விடயங்கள் குறித்து ஆராய்தல்..

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மெசெர் கல்ருப்கோ முகாமைத்துவ சேவைகள் (தனியார்) லிமிட்ட்ட்).
லங்கா போஸ்பேட் லிமிடட்டுக்கான கம்பனி செயலாளர்கள்

குறிப்புகள்:

பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்க தகுதிபெற்ற ஒரு பங்குதாரர் சார்பாக ஒரு பதிலாள் கலந்து கொண்டு வாக்களிக்க முடியும். பதிலாள் கம்பனியின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக பதிலாளுக்கான படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பதிலாளுக்கான படிவம்

லங்கா போஸ்பேட் லிமிடட்

பதிலாள்

.....எனும் முகவரியில் வசிக்கும் மற்றும் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியின் உறுப்பினராக இருக்கும் .....ஆகிய நான் / நாம் ..... எனும் முகவரியில் வசிக்கும் ..... என்பவரை 2022 டிசம்பர் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அல்லது கூட்டத்தை ஒத்திவைத்தல் அல்லது அதனைத் தொடர்ந்து இடம்பெறும் அனைத்து வாக்களிப்பிலும் எனது / எமது சார்பாக வாக்களிக்க இத்தால் நியமிக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்தியிரண்டு ..... மாதம் ..... ஆம் திகதியன்று கையொப்பமிட்டேன்.

கையொப்பம் .....

குறிப்பு -

- ஒரு பிரதிநி கூட்டத்தில் முன்வைக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திலும் தான் தகுதியானவன் எனக் கருதும் போது வாக்களிக்கலாம்.
- ஒரு பிரதிநிதி கம்பனியின் உறுப்பினராக இருக்கத் தேவையில்லை.
- பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் இதன் மறுபக்கம் குறிப்பிடப்பட்டுள்ளன.